தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் ந. வேலுசாமி



பஜ 7189

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள்

(பேராசிரியர் முனைவர் ஏசுதாசன் நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவு)

தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள்

(பேராசிரியர் முனைவர் ஏசுதாசன் நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவு)

பேராசிரியர் முனைவர் ந. வேலுசாமி
இயக்குநர்
பெரியார் சிந்தனை மையம்
பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-396 - 3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 353

நூல் : தந்தை பெரியாரின்
அறிவியல் சிந்தனைகள்

ஆசிரியர் : முனைவர் ந. வேலுசாமி

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2040, மார்கழி
முதற்பதிப்பு - டிசம்பர் 2009

பக்கம் : 54 + 4

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 50.00

ஒளியச்சு : திருவள்ளுவர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
ஈசுவரி நகர், ம.க.சாலை, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

வை. கண்ணபுரக்கண்ணன்
எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
இயக்குநர் (பொ)
பதிப்புத்துறை

அரண்மனை வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.

பதிப்புரை

மூடப்பழக்கங்களின் முடைநாற்றத்தைப் போக்கும் வகையில் பகுத்தறிவு மணம் பரப்பிய பகலவனாய் ஒளிர்ந்தவர் தந்தை பெரியார் அவர்கள். இந்த வெண்தாடி வேந்தரின் ஓயாத பரப்புரையும் உண்மையான தொண்டும் தமிழர்களின் உள்ளங்களில் வெளிச்சம் பாய்ச்சின. தமிழர்கள் தம்மையும் தமது தொன்மைப் பெருமையையும் உணர்ந்து தன்மானத்தோடு வாழவேண்டும் என்பதற்காகத் தம் காலமெல்லாம் உழைத்த தந்தை பெரியார் அவர்கள் தம் அறிவார்ந்த சிந்தனைகளால் அள்ளி அள்ளி வழங்கிய கருத்துகள் ஏராளம் ஏராளம். தம் காலத்தில் இருந்த அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பாராட்டிய அவர் என்னென்ன கண்டுபிடிப்புகள் இனிவரும் என்பதையும் கூறியிருப்பது பெரும் வியப்பைத் தருகிறது. ஒன்றை இங்கே குறிப்பிடுவது பொருந்தும். ''உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து ஆளுக்கு ஆள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்'' என்று கூறியுள்ளார் பெரியார். இன்று, இருந்த இடத்தி லிருந்துகொண்டே உலகின் எந்த மூலையில் இருப் போருடனும் நேருக்கு நேர் முகம் பார்த்துப் பேசுகிறோம். இதனைத் 'தொலை உரையாடல்', 'தொலைக்கருத்தரங்கம்' (Tele Conference) என்றெல்லாம் சொல்லுகிறோம். இது போன்று இன்று நாம் காணும் பல அறிவியல் சாதனங்கள் பற்றியெல்லாம் அன்றே தந்தை பெரியார் அவர்கள் கூறியிருப்பதையும் அவரது முற்போக்குச் சிந்தனைகளையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆற்றப்பட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக்கம்பெற ஆக்கமும் ஊக்கமும் நல்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன். அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் - நூலாசிரியர் முனைவர் ந. வேலுசாமி, அட்டைப்படம் ஆக்கிய திரு. சௌத்திரி, கணினியச்சு செய்தளித்த திருவள்ளுவர் அச்சகத்தார், பதிப்புத்துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் நன்றி.

முனைவர் ந. வேலுசாமி
இயக்குநர், பெரியார் சிந்தனை மையம்
பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

முன்னுரை

தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள் என்ற பொருண்மையில், பேராசிரியர் ஏசுதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திடமிருந்து அழைப்பு வந்தது. கரும்பு தின்னக் கூலியா என மனநிறைவோடு அப்பணியை 24.03.2009 அன்று நிறை வேற்றினேன்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் அறிவியல் மனப்பான்மையைத் (Scientific Temper) தோற்றுவித்தவரே அறிவுலகப் பேராசான் தந்தை பெரியார் அவர்கள்தான்.

அவரது மூச்சு, பேச்சு, எழுத்து, செயல் அனைத்திலும் தமிழர்கள் பிற சமுதாய மக்களைவிடச் சுயமரியாதை யுடனும், அறிவாற்றலுடனும், வசதியாகவும், சுதந்திரமாக வும் வாழ வேண்டும் என்ற ஏக்கமே நிறைந்திருந்தது எனில் மிகையல்ல.

இந்த வாழ்க்கைக்கு அறிவியல் கல்வியைக் கற்க வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். இந்த அடிப்படை யில் இனி வரும் உலகம், சோதிட ஆராய்ச்சி, கர்ப்ப ஆட்சி போன்ற அவரது நூல்கள் தோன்றிப் பரவின. சோதனைக் குழாய்க் குழந்தை பற்றியும், குடும்ப நலத் திட்டம் பற்றியும் அரசு சிந்திப்பதற்கு முன்பே சிந்தித்த தீர்க்கதரிசியாக அவர் விளங்கினார்.

ஐயாவின் மேற்கூறிய கருத்துக்களை அறிஞர், ஆய்வாளர் இடையே பகிர்ந்து கொள்ள வாய்ப்பு வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெருந்தகை, பதிவாளர், அறிவியல் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் துணைநின்ற நண்பர்கள் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்தப் பொழிவு நூலாக்கம் பெற முனைந்து பணியாற்றிய முன்னாள், இந்நாள் பதிப்புத்துறை இயக்குநர்களுக்கும் நன்றியைப் புலப்படுத்துகிறேன்.

தந்தை பெரியாரின் அறிவியல் சிந்தனைகள்

எல்லாமே அறிவியல்

அறிவியல் என்பது ஆழ்ந்து சிந்திக்கும்போதும், தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடும்போதும் புலப்படும். நிலம் எப்போது எவ்வாறு உருவாயிற்று? அதில் உயிர்கள் எப்போது தோன்றின என்றெல்லாம் கூர்மையாக எண்ணும்போது வியப்பு ஏற்படாமல் இருக்காது.

நிலத்தின் வரலாறு சுமார் நானூற்று ஐம்பது கோடி ஆண்டுகள் எனக் கணக்கிடுகின்றனர். இந்தப் பூமி எனும் நிலம் சூரியத் துகள் என்றால் நம்ப முடிகிறதா? ஆம். நம்பித்தான் ஆக வேண்டும். சூரியனிடமிருந்து பிரிந்து வந்த துகள் தொடக்கத்தில் சூரியனைப் போலவே வெப்பநிலையில் இருந்து வெப்பம் குறைந்து அதன் மீது தொடர் மழை பொழிந்து, பிறகு குறைந்தது. அதன் பின்னே நிலத்திலிருந்து கடல் தோன்றியது. இப்பகுதிகள் அனைத்தும் ஒரே கோளமாகவே இருந்து பிறகு சிறிது சிறிதாக உடைந்து நகர்ந்து கண்டங்கள் (Continents) உண்டாயின. காலம் எதையும் மாற்றவல்லது என்பதற்குப் பூமிக்கோளம் கண்டங்களாகப் பிரிந்த நிலையே தக்க எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு இந்த நிலம் உருவாகி நூற்றைம்பது கோடி ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது. அதில் தோன்றிய முதல் உயிர் கடல் பாசி. இதைத் தொடர்ந்து கோடிக்கணக்கான உயிரினங்கள் தோன்றின. இவற்றில் ஒன்று வாலில்லாக் குரங்கு. இதிலிருந்து இன்றைய மனிதனைப் போன்ற தோற்றம் கொண்ட குரங்குகள் தோன்றின. இந்தக் குரங்குகளிலிருந்து தோன்றியவர்களே இன்றைய மனிதர்கள் என்பது சார்லஸ் டார்வின் தந்த பரிணாம உண்மையாகும். குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்ற இக்கருத்து இன்று உலகம் ஒப்புக் கொண்ட உண்மை. இவ்வாறு பிறப்பதற்கு ஆன ஆண்டுகள் பத்து இலட்சம்.

இந்த மனிதத் தோற்றத்திலிருந்தே அழகியல், அரசியல், பண்பாடு, நாகரிகம், அறிவியல் ஆகியன தொடங்கின.

மனிதன் தன் வசதிக்காக இது அறிவியல், இது கலையியல் என்று பிரித்துக் கொண்டானேயன்றி அவன் துய்க்கும், சந்திக்கும் ஒவ்வொன்றிலுமே

பூத, பௌதிகங்கள் அடங்கி உள்ளன. அதாவது அனைத்தும் அறிவியலே ஆகும்.

பொருளாதாரம் (Economics) என்பதை அறிவியல் என்று கேள்விப்பட்டிருக்கிறோமா! பொருளாதாரம் என்பது செல்வத்தைப் பற்றிய அறிவியல் (Science of Wealth) என்றார் ஆடம்ஸ்மித். உண்மை இவ்வாறிருக்கத் தகப்பனற்ற அறிவியல் (Bastard Science), சோகமான அறிவியல் (Gloomy Science) என்றும் விமர்சித்தனர். ஆனால் அவர்கள் பொருளாதாரம் ஓர் அறிவியல் என்பதை மட்டும் எதிர்க்கவில்லை. ஆக, பொருளாதாரமே அறிவியல் ஆனபின் மற்றவற்றைப் பற்றி நாம் எண்ண வேண்டியதில்லை.

இவையெல்லாம் சிந்தனையின் விளைவேயாகும். அனைத்து அறிவியலும் சிந்தனையை மெருகூட்டுவதைத் தவிர வேறு எதையும் செய்வதில்லை என்றும், செய்திகளைச் சேகரிப்பவையல்ல, துணிவான யூகமே நம்மை மேல் நடத்திச் செல்கிறது என்றும் கூறிய ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் கருத்து இங்கே பொருந்தி நிற்பதைக் காணலாம்.

சமூக அறிவியல்

அறிவியலில் இருந்து சமூக அறிவியலுக்கு வருவோம். எல்லா ஆறுகளும் கடலில் கலப்பதைப்போல் எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளும் மக்களுக்காகத்தானே! அறிவியல் சிந்தனைகளை மக்கள் வாழ்வியலோடு பொருத்தி அவர்களின் உயர்வுக்காகச் சிந்திப்பதே சமூக அறிவியல் (Social Science) ஆகும்.

மனிதனையும், அவனுடைய எதிர்காலத்தையும் பற்றிக் கவலைப்படுவதுதான் எல்லாவிதமான தொழில்நுணுக்க முயற்சிகளின் முதன்மை நோக்கமாகும். உங்களுடைய திட்டங்களுக்கும் சமன்பாடுகளுக்கும் (Equations) இடையில் இதை மறந்து விடக்கூடாது என்று எச்சரித்துள்ளார் விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், பெரும்பாலும் புதிய துறைகளிலும் வெளிப்படையான வாழ்க்கை மேம்பாட்டை அல்லது நன்மையை, சுகத்தை உடனடியாக அளிப்பனவாகவும் இருக்கின்றன. இதனால் அவை, உடனடியாக மக்கள் வாழ்வோடு ஒன்றிக் கலந்து அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஆனால் சமூகச் சிந்தனையாளர்களின் கருத்துகள் அக்கருத்துகளைச் சோதனை செய்வதற்கான சோதனைச் சமூகங்கள் (Demonstration Society) இல்லாமையால் அல்லது ஆட்சித்துணை இல்லாமையால் அல்லது பழமைக் கருத்தாளரின் திட்டமிட்ட எதிர்ப்பால் அல்லது அவர்களின் இயல்பான சோம்பேறித் தனத்தால் மக்களால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படாமல் வாழ்வோடு இரண்டறக் கலக்க முடியாமல் போய்விடுகின்றன.

மேலும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் காப்புரிமை (Patent) செய்யப்பட்டுத் தொழிலதிபர்களுக்கு விற்கப்படவும் அவர்கள் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்ட பொருள்களை உற்பத்தி செய்து அவை சந்தையில் விற்கப்படவுமெனக் கண்டுபிடித்தவர்களுக்கும் விளம்பரம் செய்கிறவர்களுக்கும் இலாபம் தருவனவாக அமைகின்றன. ஆனால், சமூகச் சீர்திருத்தக் கருத்துகளில் இத்தகைய இலாபங்கள் இல்லாததோடு கருத்துகளைப் பரப்புவதில் நேரம், பொருள், உழைப்பு ஆகியவை செலவழிக்கப்படுகின்றன. இத்துடன் பழைய கருத்து முதல்வாதச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பையும் ஆபத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இதனால் பல உலகப் பெரியார்களின் கருத்துகள் அவர்கள் காலங்களிலேயே வெற்றிபெறாமல் போய்விட்டன.

கலிலியோ இந்த உலகம் உருண்டை ; சூரியன் பூமியைச் சுற்றவில்லை ; பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று கண்டறிந்து சொன்னதற்குப் போப்பாண்டவர் அவரை நாத்திகன் என முத்திரையிட்டு மரண தண்டனை விதித்தார். கலிலியோ (உயிருக்கு அஞ்சி) தான் சொன்னது தவறுதான் எனப் போப்பிடம் மன்னிப்புக் கேட்ட பின்பு உயிரோடு விடப்பட்டார்.

பிறகு வந்த போப் தாங்கள் செய்தது, சொன்னதுதான் தவறு; கலிலியோ சொன்னதுதான் சரியானது என்று பிரகடனப்படுத்தி மன்னிப்புக் கேட்டார் என்பதும் வரலாறு. ஆனால் இந்த மதவாதிகள் உணரும் வரை கலிலியோ போன்ற அறிவியல் அறிஞர்கள் உயிர்வாழ இயலுமா? இதுதான் காலக்கொடுமை!.

இன்று (12.02.2009) உயிர்களின் தோற்றம் - பரிணாமக் கோட்பாட்டின் தந்தை சார்லஸ் டார்வினின் 200ஆம் ஆண்டுப் பிறந்த நாளை அறிவியல் மனப்பான்மையைப் பரப்பும் விழாவாகக் கொண்டாடுகின்றோம்.

ஆனால், 1859ஆம் ஆண்டு சார்லஸ் டார்வின் குரங்கிலிருந்து தோன்றிப் பரிணாம வளர்ச்சியால் தோன்றியவனே மனிதன் என்று தனது ஆராய்ச்சியை வெளியிட்டபோது போப்பாண்டவரும் கிறித்தவக் கோயில்களும் அறிவற்ற கருத்து என்றே தெரிவித்தனர்.

நூறாண்டு ஐரோப்பிய வரலாற்றை மாற்றி எழுதும் வகையில் வாழ்ந்த மாவீரன் நெப்போலியனைப் பற்றி 182 ஆண்டுகளில் சுமார் எண்பதாயிரம் புத்தகங்கள் எழுதப்பட்டன. உலகெங்கிலும், பிறர் பொறாமைப்படும் வண்ணம் ஆட்சிபுரிந்து வந்த நெப்போலியன் மீது ஒரு புதிய குற்றச்சாட்டைக் கற்பித்தனர். நெப்போலியனின் ஆட்சியால் வருத்தம் கொண்ட மேரி மாதாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது என்று கதை கட்டி விட்டனர்.

வேறு யாராவது ஆட்சியிலிருந்தால் அஞ்சி அலறியிருப்பார்கள். மதபோதகருக்கு அடங்கியிருப்பார்கள். ஆனால் நெப்போலியன் மாதாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடியுமா? எவ்வாறு? என்று தனக்குள் கேட்டுக்கொண்டு மாதா சிலையின் கண்களிலிருந்து கண்ணீர் வருவதை உற்றுநோக்கி ஆய்வு செய்தார். மாதாவின் கண்களிலிருந்து வருவது கண்ணீர் அல்ல; கண்ணீர்ப்படிவம், ஜெபமாலையின் உருக்களில் உருவான களிம்பைக் கண்களில் தடவிக் கண்ணீர்போன்று மாயத் தோற்றத்தை உருவாக்கியுள்ளனர் என்று விளக்கினார்.

பொதுவாகவே - மனிதன் பார்க்கிறான் ; விஞ்ஞானி உற்றுப் பார்க்கிறான் ; கவிஞன் ஊடுருவிப் பார்க்கிறான் என்று கூறுவர். இங்கே நெப்போலியன் மூன்று செயல்களையும் ஒருசேரச் செய்ததன் காரணமாக மூடநம்பிக்கைச் செயலால் அவனை வீழ்த்த நினைத்தவர்களின் முயற்சி பலிக்கவில்லை. இங்கே, அனைவரும் நெப்போலியன் ஆக இருக்க இயலுமா? என்பது ஒரு வினாவாகும்.

கறவை மாட்டின் மடியிலிருந்து பாலைக் குடிப்பது, அதன் குருதியைக் குடிப்பதற்கு ஒப்பானது என்று ஒரு கட்டத்தில் காந்தியடிகள் கூறினார். அனைவரும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தபோது ஒரே ஒருவர் மட்டும் எழுந்து, அப்படியானால், நாமெல்லோரும் தாயின் பாலைக் குடித்துத் தானே வளர்ந்தோம். அதுவும் தாயின் குருதிதானா? என்ற கேள்வியைக் கேட்டபோது, தேசத்தந்தையிடமிருந்து மறுமொழி இல்லை. இப்படிக் கேட்டவர் இந்தியத்

தத்துவ மேதையும், இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்தவருமாகிய டாக்டர்.எஸ். இராதாகிருஷ்ணன்.

கலிலியோ,டார்வின், நெப்போலியன், டாக்டர்.எஸ்.இராதாகிருஷ்ணன் போன்றவர்களால்தான் சமூக விஞ்ஞானம் என்ற பகுத்தறிவும், அறிவியலும் இன்று வளர்ந்துள்ளன.

இந்தியாவின் மீது படையெடுத்த வெளிநாட்டினர் அனைவராலும் அது தோற்கடிக்கப்பட்டமைக்குக் காரணம் இந்தியர்கள் அறிவியல்பூர்வமான போர்முறைகளையும், உடல்வலிமையையும் பெறாததுதான் என்பதும் மாறாக, எப்போதும் நல்லநாள், கெட்ட நாள், ராகு காலம், குளிகை, எமகண்டம், சோதிடம், தோஷம் போன்ற மூடநம்பிக்கைகளைக் கொண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அடிமைகளாக இருந்ததுதான் என்பதும் வெட்டவெளிச்சமாகிறது.

இந்தியா என்றால் சாமியார்களின் ஆதிக்கபூமி என்ற கருத்து பலப்பட்டுள்ளது. இந்தியாவில் காசநோய் காரணமாக நிமிடத்திற்கு மூவர் என்ற அளவில் இறக்கிறார்கள் எனில் அதற்குக் காரணம் போதிய சத்துணவின்மை.

கொடிய ஹிட்லரின் இனவெறி ஆதிக்கத்திலிருந்து உலகத்தை மீட்பதற்கு இரண்டாம் உலக யுத்தத்தில் நேசநாடுகளின் வெற்றிக்குக் காரணமாகச் சோவியத் நாட்டின் தலைவர் ஜோசப் ஸ்டாலினும் அவர் நாட்டு மக்களுக்குச் செம்படையும் இருந்தனர் என்பதை வரலாறு மறக்காது. அத்தகைய ஸ்டாலின் கூறியது : இந்தியாவில் சமதர்மம் தோன்ற வேண்டுமானால் முதலில் அங்கே சீர்திருத்தமும், மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டும் என்பதேயாகும்.

விஞ்ஞானத்தை வளர்ப்பதாகக் கூறியபடியே மூட நம்பிக்கைகளையும் வளர்ப்பது சமூக அறிவியலன்று. பல அரசியல் இயக்கங்களில் விஞ்ஞானத்தை நிறையப் படிக்கிறார்கள். ஐன்ஸ்டீனின் கோட்பாடு முதல் இன்றைய நவீன விஞ்ஞானம் வரை படிக்கிறார்கள். சமூக விஞ்ஞானத்தை – இந்த உண்மையைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

சமூக விஞ்ஞானத்தை – பகுத்தறிவுப்பாடத்தைப் பல்கலைக்கழகங்களால் கற்றுத்தர இயலாது. நாம்தான் கற்றுத்தர வேண்டும்; கற்றுத்தர முடியும். இதை இன்றைக்கு விஞ்ஞானிக்கும் கற்றுத்தர

வேண்டும். அப்படி இல்லையென்றால், அவர் கண்டுபிடித்த உண்மைகளைக் காட்டுவதற்கு, எல்லாம் ஆண்டவன் செயல் என்று கூறத் தொடங்கி விடுவார்.

இன்றைக்கு நம் நாடு சந்திராயன் என்ற விண்கலத்தை வெற்றிகரமாகச் சந்திரனுக்கு அனுப்பி, அது அங்கு ஆய்வை மேற்கொண்டு புகைப்படங்களை எடுத்து நமக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆனால், நமக்கு முன்பே அங்குச் சென்ற அமெரிக்கர்கள் அங்கிருந்து சில கற்களை எடுத்து வந்தார்கள். அவற்றில் ஒன்றைச் சென்னைக் கண்காட்சியில் வைத்திருந்தபோது பலரும் சென்று பார்த்தனர்.

ஆனால், துன்பப்பட்டுச் சந்திரனுக்கே சென்று எடுத்து வந்த உண்மையான கல்லைப் பொய் என்கிறார்கள். எனவே, மூட நம்பிக்கைகள் ஒழிந்து சமூக விஞ்ஞானம் மேலோங்க வேண்டுமென்றால் இங்கு அறிவியல் மனப்பான்மை வேரூன்ற வேண்டும். அதற்கு அரசியல் இயக்கங்கள் அவ்வளவாகப் பயன்படாது. சோவியத் நாட்டில் புரட்சித் தலைவர் லெனினின் சோஷலிசக் கொள்கைகள் வெற்றி பெற ஒரு தனி இயக்கம் தேவைப்பட்டது. இந்தியாவுக்கு - குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு, அந்த நல்ல இயக்கம் எதுவாக இருக்க முடியும்? அதைத் தோற்றுவிப்பது, வழிநடத்துவது, பரப்புவது யார்? என்ற வினாக்கள் வெடித்துக் கிளம்பியதுபோது, விடையாகத் தோன்றியவர்தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.

தோன்றினார் பெரியார்

தொடக்கப்பள்ளிக் கல்வியையே முழுமையாக முடிக்காத தந்தை பெரியார் தோன்றிய பிறகுதான் கல்வியாளர்களும், அறிவியல் அறிஞர்களும் பிறந்து பணியாற்றியபோது தோன்றாத அறிவியல் சிந்தனைகள் தோன்றின ; அறிவியல் மனப்பான்மை (Scientific Temperament) பரவியது; சமுதாய மயம் ஆயிற்று.

ஜே.டி.பர்னால் (1901-1972) என்ற அறிவியல் அறிஞர் தந்தை பெரியாருக்குப் பின் தோன்றி அவருக்கு முன்பே மறைந்தவர். அவரின் மறக்க முடியாத கூற்று - அறிவியலுக்கும் சமுதாயத்திற்கும் தொடர்பு உண்டு என்பதாகும்.

அறிவியல் உண்மையாகவே அனைத்து நாடுகளுக்கும் உரியது (Science is truly international) என்ற உண்மை படிப்படியாகப் பரவியது.

பகுத்தறிவும் அறிவியலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். தந்தை பெரியார் பதினாறு வயது இளைஞனாக (1895) இருந்தபோதே பகுத்தறிவும் நாத்திகமும் அவர் சிந்தனையில் அரும்பத் தொடங்கின.

பகுத்தறிவும் நாத்திகமும் அறிவியலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றதால் தந்தை பெரியார் தமிழ்நாட்டிற்கோ, இந்தியாவுக்கோ, ஆசியக் கண்டத்திற்கோ மட்டும் உரிமையானவர் இல்லை. அவர் ஓர் உலகர் (Internationalist) ஆவார். ஆம்! அவர் உலகுக்கே சொந்தமானவர்.

தற்கால அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதர்களுக்கு அளித்துள்ள ஒரே பாடம் 'முடியாதது என்று ஒன்றுமில்லை' என்பதுதான் எனும் லூயிஸ் மம்போர்ட் என்ற அறிஞரின் கருத்திற்கிணங்க மக்களுக்கு அறிவு கொளுத்தியவர் தந்தை பெரியார்.

அறிவியல் சிந்தனையின் வெளிப்பாடு

தந்தை பெரியாரின் உள்ளத்தில் இளமை முதலே அறிவியல் சிந்தனைகளும் தர்க்க வாதங்களும் ஊறிய வண்ணம் இருந்தாலும் அவை செயல் வடிவில் வெளிப்பட்டது 1930-இல் என்று கூறலாம். தந்தை பெரியாரும் அவரது குழுவினரும் மலேசியா சென்று தமிழ்நாட்டுக்குத் திரும்பியதும் அவரது அறிவியல் சிந்தனை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமாக (Family Planning) வெளிப்பட்டது. அதைப் பற்றிய நூலினை எழுதிய இந்தியாவின் முதல் பகுத்தறிவுத் தலைவரும், ஆசிரியரும், முன்னோடியும் அவரே. இன்னும் கூற வேண்டுமானால் குழந்தை பெறுவதைக் கட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை இந்திய அரசுக்கு முன்பே வற்புறுத்திச் சிந்திக்க வைத்தவர் தந்தை பெரியார்.

இதை அற்புதமாகக் கீழ்க்காணும் பாடல் அடிகளில் வெளிப்படுத்தியுள்ளார் தந்தை பெரியார்.

'பின்னெழுந்து பிழைப்படைந்து வீரங்காட்டிப் பிறநாடு முன்னேறக் காணுங்காலை முன்னெழுந்த மக்களிங்கு முன்னேற்றத்தின் முனை கருகிப் போவதென்ன' எனச் சிந்தித்தார்.

துன்பங்களுக்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கம்

இன்று (2009) வரை உலகின் மக்கள் தொகையில் முதலிடம் பெற்றிருப்பது சீனம். இரண்டாவது இடத்தில் இருப்பது இந்தியா. நாளை இது

இடம் மாறலாம். அதாவது முதலிடத்தில் இந்தியாவும், இரண்டாம் இடத்தில் சீனமும் இருக்காது என யார் கூற முடியும்? குடும்ப நலத்திட்டத்தில் நாம் எவ்வளவோ தூரம் முன் சென்றிருந்தும் இந்த நிலை. இதற்கான முயற்சியே எடுக்காமல் இருந்திருந்தால் நம் நாட்டின் மக்கள்தொகை உயர்வைக் கற்பனை செய்து பார்க்க இயலுமா? இயலாது.

எனவேதான் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த - மட்டுப் படுத்தக் கர்ப்பத்தடையே மிகத்தேவை என்றார். அதற்கு அவர் கூறிய காரணங்கள் ஆதாரபூர்வமானவை ; அசைக்க முடியாதவை ; அறிவியல் பூர்வமானவை. கர்ப்பத்தடை வேண்டும் என்பதில் பெரியார் கூறிய காரணங்களுக்கும், பிறர் கூறிய காரணங்களுக்கும் பெரிய வேறுபாடு உண்டு.

பெண்கள் விடுதலை பெறுவதற்கும் வேறு எவரையும் சாராமலிருப்பதற்கும் அது தேவை என்பது பெரியாரின் முதன்மைக் காரணம். மற்றவர்களோ - பெண்களின் உடல்நலத்தையும், பிள்ளைகளின் நன்மையையும், நாட்டின் வறுமைநிலையையும் குடும்பச் சொத்து குறையாமல் இருக்க வேண்டியதையும் கருத்தில் கொண்டு கர்ப்பத்தடை அவசியம் என்கிறார்கள். இதை வெளிநாட்டார் கூட வரவேற்கிறார்கள்.

ஆனால் பெண்களின் விடுதலைக்குக் கர்ப்பம் விரோதியாய் இருப்பதால் பெண்கள் பிள்ளை பெறுவதை அடியோடு நிறுத்த வேண்டும் என்கிறார் பெரியார். அது மட்டும் அல்ல; பல குழந்தைகளைப் பெறுவதால் ஆண்கள் கூட விடுதலையுடனும் சுயேச்சையுடனும் இருக்க முடியவில்லை என்கிறார். உலகில் மனிதன் துன்பப்பட்டுத் தன் உயிர் வாழ்க்கைக்கே - பொருள் தேடுவதற்கே சுதந்திரத்தை விற்று அடிமையாக வேண்டி இருக்கும்போது பெற்ற பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டிய தேவையும் இருக்குமானால் அவ்விடத்தில் சுயேச்சை இருக்க முடியுமா எனக் கேட்கிறார். அதிலும் பெண்களுக்கு இத்துன்பம் கொடியது. எனவே பெண்கள் கண்டிப்பாய்ப் பிள்ளை பெறுவதை நிறுத்தியே ஆக வேண்டும் என்றார். மேலும் பெண்கள் நோயாளிகளாக ஆவதற்கும் விரைவாகக் கிழப்பருவம் எய்துவதற்கும் இந்தக் கர்ப்பமே மூலகாரணம் என நிறுவுகிறார்.

ஆண்களில் பிரம்மச்சாரிகளும், சந்நியாசிகளும் சங்கராச்சாரியார்களும், தம்பிரான்களும், பண்டாரசந்நிதிகளும் ஏற்பட்டிருப்பதுபோல் பெண்களிலும் பலர் துறவியாவதற்கு இந்தக் கர்ப்பமே பெருந்தடை என்பதை அடையாளம் காட்டியுள்ளார்.

மதுவிலக்குக்கு ஒரு பிரச்சாரம். தொற்று நோய்களை ஒழிக்க ஒரு பிரச்சாரம். இப்படியெல்லாம் இருக்கும்போது, கர்ப்பத்திற்குத் தடைவிதிக்க ஒரு

பிரச்சாரம் இல்லையே என ஏங்குகிறார். இதற்கு ஒரு நிறுவனம் ஏற்படுத்தியாவது பிரச்சாரம் செய்ய வேண்டும் என்கிறார்.

உலகில் நிலவும் ,கோடிக்கணக்கான உயிர்களில் பிள்ளைப்பேற்றுக்காகச் சேருவது மனித உயிர்கள் மட்டும்தான். எனவே, மனிதனுக்குப் பகுத்தறிவு இருந்தும் பயனில்லை என்று கவலை கொள்கிறார். குழந்தைகள் இருப்பதால் சுதந்திரமும் வீரமும் ஒரு பெண்ணை விட்டு விலகிவிடுகின்றன. பெண்களுக்காகத்தான் இத்தகைய துயரங்கள் எனில், பொதுவாக அனைவருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது.

குழந்தைகளை அதிகம் பெறப் பெறப் பெற்றோர்களின் சுகங்கள் தாமாகவே குறைந்து கொண்டு வருவது கண்கூடு. இதைப்போலத்தான் ஒரு நாடும் தன் வலிமைக்கு மீறி மக்கள் தொகையைப் பெருக்கிக் கொண்டால் அது எப்போதும் நோய் நொடிகளாலும் வறுமையாலும் வாட்டமுற்று இருப்பதோடு - தன் இயற்கையழகையும் முற்போக்கையும் சுயமரியாதையையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது. மேலும், இதனால் சமூகச் சீர்திருத்தவாதிகள் தங்கள் முற்போக்கிற்கு எவ்வளவு முயன்றும் தோல்வியையே தழுவும் நிலை ஏற்படுகிறது.

மேலும் ஒரு நாட்டு மக்கள் மீது, இன்னொரு நாட்டு மக்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. பொறாமைப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. மற்றவர்களைப் பட்டினியாகப் போட்டால்தான் தாம் வாழ முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

மேல்நாட்டில் கர்ப்பத்தடைக்குப் பல சாதனங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தி வருகிறார்கள்; நம் நாட்டிலும் கூட, அப்படியே. ஆனால் உண்மையிலேயே கர்ப்பத்தடை செய்து கொள்ள வேண்டியவர்கள் ஏழைகள். ஆனால் அவர்களோ கருத்தரிக்காமல் இருப்பதைப் பற்றிப் பேசுவதே நாகரிகத்திற்கு எதிரான செயல் எனக் கருதுகிறார்கள். பாவம் என்றும் சாமி குற்றம் என்றும் பயப்படுகிறார்கள்.

ஆனால் மேனாட்டில் டாக்டர்.மாரீ ஸ்டோப்ஸ் எனும் ஆங்கிலப்பெண் அஞ்சாமையுடன் முன் வந்து எவ்விதப் பழிக்கும் அஞ்சாமல் கர்ப்பத்தடைப்

பிரச்சாரம் செய்யத் துணிந்ததன் பயனாய்க் கர்ப்பத்தடை பற்றிய பிரச்சாரம் எளிமையாகிவிட்டதாகப் பெரியார் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருப்பது இங்குக் கருதத்தக்கதாகும்.

கர்ப்பத்தடை என்பது கர்ப்பம் ஏற்படாமல் தடுப்பதற்கு உரியதே தவிர கர்ப்பம் உண்டான பிறகு அதைக் கலைப்பதற்காக அல்ல. கர்ப்பம் ஏற்பட்ட பின்பு கலைப்பது தாயின் உடல் வலிமைக்கும் சில நேரங்களில் அவரின் உயிருக்கும் கேடு விளைவிக்கும். எனவே கருக்கலைப்பு முறையை யாரும் கடைப்பிடிக்கக் கூடாது.

பெண்ணும் ஆணும் தகுந்த வயது அடைவதற்கு முன் பெண் கர்ப்பம் தரித்துவிட்டால் அந்தக் குழந்தை இளமைப் பருவத்தில் வலிமையற்ற - உறுதியற்ற உடலமைப்பைப் பெற்றுவிடும். குடும்பத்தில் போதிய வருவாய் இல்லாதபோது குழந்தைகளைப் பெற்றுவிட்டால் வறுமையும் துன்பமும் வாட்டிக் குடும்ப வாழ்க்கை நரக வாழ்க்கையாகிவிடும்.

கணவன் தனக்கு விருப்பமான வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவும் மனைவி வேறு ஓர் ஆடவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் போவதற்கு இந்தக் குழந்தைகளே தடை. பிள்ளைகளைப் பெறுவது ஒன்றினால் மட்டுமே பெண்கள் தங்களுக்குரிய விடுதலை, மானம், அறிவு எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டியுள்ளது. எனவே கர்ப்பத்தடையைக் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் தேவை என்பது பெரியார் முப்பதுகளில் கொண்டிருந்த மனித நலச் சிந்தனையாகும்.

சோதனைக்குழாய்க் குழந்தை (Test Tube Baby) சாதனை பற்றிக் கூறியவர்:

இன்று நம் மருத்துவமனைகளில் சோதனைக்குழாய்க் குழந்தையைச் செவிலியர்கள் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பொது மக்களுக்கு மகிழ்ச்சி பொங்கக் காட்டிக் கொண்டிருப்பதைச் செய்தித்தாள்களில் கண்டு வியப்படைகிறோம். அக்குழந்தைகள் வளர்ந்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளிப்பதையும் படித்து மகிழ்கிறோம். இச்செய்தியினை 1943-ஆம் ஆண்டிலேயே பெரியார் உலகுக்கு வழங்கியுள்ளார். சோதனைக் குழாயில் குழந்தை உருவாக்கப்படும் என்ற தன் சுயசிந்தனை முடிவைத் தெரிவித்தார். இதிலிருந்து அவரது தீர்க்க தரிசனத்தை ஊகிக்கலாம்.

இந்த உண்மையை அவரே கண்கூடாகக் கண்டபின் அவரது மரண சாசனமாக அமைந்த சென்னைத் தியாகராய நகர் சொற்பொழிவில் (19.12.1973) குறிப்பிட்டதை அவர் குரலிலேயே கேட்டு மகிழ்வோம்.

"கொஞ்சநேரத்திற்கு முன்னே சொன்னேன் பாருங்கள்; நேற்று, முந்தாநாள் வந்த பத்திரிகையிலே குழந்தைகளை உண்டாக்குகிறான். முட்டையை எடுத்துவைத்தால் கூட 10,20 நாளிலேயே அது குஞ்சு பொரித்து விடும். மனுஷனின் முட்டையை எடுத்து வைக்கிறான். 10 வருடத்திற்கு அப்புறம் குஞ்சு பொரிக்கணும் என்றால் பொரிக்கிறது அது. இன்றைக்கே பொரித்தாகணும் என்று இல்லை. பெண்கள் இந்திரியம் கொஞ்சம் அதை ஒரு டப்பியிலே, பாதுகாக்கிறான். 'பேங்க்' என்று பேர் அதற்கு. அந்தப் பேங்கிலே வைத்துப் பாதுகாக்கிறான். என்றைக்குப் பிள்ளை வேணுமோ அன்றைக்கு இரண்டையும் எடுத்து வைத்துக் கொள்ளுகிறான். 'கியா, கியா' என்று கத்துகிறது பிள்ளை. இதெல்லாம் பொய் என்று சொல்ல முடியாது. பெரிய பிரசித்தியான பத்திரிகையிலே போட்டாவோடு வருகிறது. அப்புறம் ஐயாயிரம் மைல் பறக்கிறான். ஆயிரம் மைல் வீதம் பறக்கிறான்; சந்திரமண்டலத்திற்கெல்லாம் போய்விட்டு வந்தான். இதெல்லாமா பொய்?"

ஆக, யாரும் எளிதில் எட்டி விட முடியாத கோட்பாடுகளை, சிந்தனைகளை எளிதாகத் தொட்டுச் சென்றவர்தான் பெரியார்.

"நம் பழைய இலட்சியத்தின் சிறந்த அம்சங்களையும் நவீன விஞ்ஞானத்தின் சிறந்த அம்சங்களையும் சேர்ப்பதுதான் நாம் இப்பொழுது செய்ய வேண்டிய வேலை" என்ற டாக்டர் இராசேந்திரப் பிரசாத் கூற்றும்.

"நவீன விஞ்ஞானத்திற்கும் ஆத்மீக உணர்வுக்குமிடையே தொடர்பான பாலம் அவசியம் வேண்டும். இவ்விஞ்ஞான ரீதியான ஆத்மீகவழியே இந்தியாவின் மிக உயரிய பண்பாடு ஆகும்" என்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் கூற்றும் பெரியாரின் விஞ்ஞான அணுகுமுறையோடு ஒப்பிடும்போது வெகு தூரத்தில் நிற்க வேண்டிய கருத்துக்கள் என்றே கொள்ள வேண்டும்.

பெரியார் பார்வையில் கிராமச் சீர்திருத்தம்

கிராமம் எனப்படும் ஊர் அல்லது சிற்றூர், நகரம் என்பவற்றின் வேறுபாட்டை முதலில் ஒழிக்க வேண்டும். ஊர்மக்களை நகர மக்கள் இழிவாக நடத்தி வரும் போக்கைக் கண்டித்ததோடு சென்னையை விட ஈரோடு எந்த வகையில் குறைந்தது என்ற கேள்வியையும் கேட்டுச் சிந்திக்க வைக்கிறார் பெரியார்.

சிற்றூர் – நகரம் என்று பிரித்துக் கூறுவதே வருணாசிரம முறைதான். சமதர்மம் பேசுகிறவர்களே கிராமம் – நகரம் என்ற பிரிவினை இருக்க வேண்டும் என்று கூறும் விந்தையை எடுத்துக் காட்டியுள்ளார் பெரியார்.

ஒரு கோயில் திருவிழாவால் என்ன விளைவு வந்துவிடப்போகிறது எனக் கேட்கிறார். சுகாதாரக் கேடுகள், ஒழுக்கக் கேடுகள், பண விரயம் ஆகியவற்றைத் தவிர வேறு ஒன்றும் நடப்பதில்லை. இதை விட விவசாயக் கண்காட்சி நடத்தி விவசாயம் செய்யும் விதம், விவசாயம் பெருக விவசாயிகள் செய்ய வேண்டிய வேலைகள் பற்றி மக்கள் நன்கு உணருமாறு காட்ட வேண்டும். அது போலவே சுகாதாரக் கண்காட்சிகளை ஏற்படுத்த வேண்டும். அந்தக் கண்காட்சி மூலம் ஊர்மக்கள் எவ்வாறு சுகாதார முறைப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும், திருவிழா நடக்கும் இடங்களில் சுகாதார முறைப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும், திருவிழா நடக்கும் இடங்களில் சுகாதார முறைக்கு விரோதமாக நடப்பதைப் பற்றியும் விளக்க வேண்டும். தொழிற்காட்சி வைத்து இயந்திரத்தொழில், கைத்தொழில் முறைகளை விளக்க வேண்டும் என்பதும் அவரது சிந்தனையாகும்.

ஊர்ப்புற மக்களுக்குக் கல்வியின் இன்றியமையாமையை அற்புதமாக ஊர்ப்புறம் நகர்ப்புறம் வாழ் குடும்பங்களின் வழி எடுத்துக் காட்டுகின்றார். கிராமத்தானுக்குக் கல்வி இல்லாமல் இருந்தால்தானே, பயிரிட்டு, உழைத்து, அறுத்து, மூட்டையாகத் தைத்து வண்டியில் போட்டு நகரத்துக்கு அனுப்பி விட்டு, சாவியாய்ப்போன நெல்லை வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்க் கஞ்சியாகக் காய்ச்சிக் கலயத்தில் ஊற்றிக் குழந்தைகளைச் சுற்றி உட்கார வைத்துக்கொண்டு, இன்று கடவுள் இவ்வளவுதான் படியளந்தார் என்றபடி எருமை தவிட்டுத் தண்ணீர் குடிப்பது போன்று வயிறு முட்டக் குடிக்க முடியும். அத்துடன் அவன் நிறைவடையவும் முடியும்.

அப்படியல்லாமல், கிராமத்தானுக்குக் கல்வி கொடுத்துவிட்டால் – நாம் வேலை செய்கிறோம். நாம் விளைவித்தோம். நாம் உருப்படி செய்தோம். அப்படியிருக்க நாம் கஞ்சி குடிப்பதா? வேலை செய்யாதவன் தறித்துப்புடைத்து ஆக்கிப் படைத்துக் கொண்டு தொந்தி வளர உண்பதா? என்ற எண்ணம் ஏற்பட்டுவிடாதா? அதனால்தான் ஊர்கள் எல்லாம் பஞ்சமர்கள் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் பெரியார்.

கிராமம் உண்மையாகவே சீர்திருத்தம் பெற வேண்டுமானால், உழவுத்தொழில் உடல் உழைப்பில் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில் - அதுவும் இயந்திரத் தொழில்முறையாக (Industrial) ஆக்க வேண்டும் என்றார். உழுவதும் விதைப்பதும் அறுப்பதும் எந்திரத்தால் செய்யப்பட வேண்டும். கிணறு வெட்டுவதும், நீர் இறைப்பதும் பாய்ச்சுவதும் எந்திரத்தாலேயே செய்யப்பட வேண்டும் என்றார்.

ஒவ்வொரு புதிய எந்திரமும் அல்லது தொழில்நுட்பமும் இதுவரையில் உள்ள எந்திரங்களையும், தொழில்நுட்பங்களையும் மாற்றுவதற்கான காரணம் என்னவெனில் அவற்றை நாம் புதிய புதிய இணைப்பாகப் பயன்படுத்தும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதனால்தான். புதிய எந்திரம் அல்லது தொழில் நுட்பக்கூறுகளின் எண்ணிக்கை கூட்டல் முறையில் கூடுகிறபோது, இணைப்புகளின் எண் பெருக்கல் முறையில் கூடுகிறது. உண்மையில் ஒவ்வொரு புதிய இணைப்பும் ஒரு மேம்பட்ட எந்திரமாகக் கருதப்படலாம் என்ற ஆல்வின் டோஃப்லரின் கருத்து தந்தை பெரியாரின் சிந்தனையை அரண் செய்வதை அறியலாம்.

தொழில்நுட்ப வளர்ச்சியால் நாம் வாழும் முறை ஈர்க்கப்படுவது உண்மை. எதிர்காலத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதற்கேற்பத் தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இங்கு இயலுவதாகும்.

தந்தை பெரியாரின் சிந்தனைக் கதிர்கள் மனித சமுதாயத்தை ஒரு புத்தம் புதிய உலகிற்கு அழைத்துச் செல்லுபவை. பல்லாயிரம் ஆண்டுகளாகச் செக்கு மாட்டுச் சுபாவத்தோடு இருந்த மனிதன் வாழ்வை மாற்றி ஒரு முற்றிலும் புதிய திருப்பத்தைத் தந்து ஒரு புதிய உலகை நிர்மாணிக்கும் வளம் நிறைந்தவைதான் தந்தை பெரியாரின் கருத்துக் கருவூலங்கள்'.

எனவே, எந்திர வசதிகள் பெருக வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை காட்டினார். எந்திரங்கள் வழிச் செய்தால் 500 பேர் உள்ள தச்சுப்பட்டறையில் ஒரு நாளைக்கு ஆயிரம் ஜன்னல் கூடுகளும் ஆயிரம் நிலவுக்கூடுகளும் செய்யலாம்.

எடுத்துக்காட்டாக ஓர் எந்திரம் இருபத்தைந்தடி நீளமுள்ள 1"x3" கனமுள்ள சட்டங்கள் 24 பக்கமாக வரிசை வைத்துக் கம்பி அளவு போட,

இயந்திரத்தைத் திருப்பினால் 5 நிமிடத்தில் துளையைப்போட்டு இணைப்பைச் செலுத்தி அளவுப்படித் துண்டும் போட்டு விடுகிறது.

பிறகு ஆட்கள் எடுத்துச் சேர்த்துக் கம்பி கோத்து ஆப்பு இறுக்கி அடுக்க வேண்டியது தான். இப்படியே கட்டடத்திற்கு வரவேண்டிய மற்ற காரியங்கள் அனைத்தையும் செய்து ஒரு நாளைக்குப் பல வீடுகள் கட்டி முடிக்கலாம்.

பத்தாண்டுகளில் வீடு கட்டும் துன்பம் இந்த ஒரு துறையால் தீர்ந்துவிடும். இதைப்போலவே அதிக அளவில் தண்ணீர் இறைக்கும் எந்திரம், மோட்டார், எண்ணெய் எஞ்சின் செய்து அரசு வாடகைக்கும் சுழற்சி முறையில் விட்டு வேளாண்மைக்கு உதவலாம் என்பது பெரியாரின் சிந்தனை. இப்படியே பல துறைகளால் பத்தாண்டில் உணவு, உடை, வீடு ஆகியவற்றின் பற்றாக்குறைகளைக் களைய வாய்ப்பேற்படும்.

இவற்றால் மக்களிடம் உள்ள வேறுபாட்டுணர்ச்சி, பற்றாக்குறை, கவலை, மனிதனுக்கு மனிதன் அன்பில்லாமை, வெறுப்பு, பொறாமை ஆகியவை கணிசமாகக் குறையும். இவை குறைந்த இடங்களில் மனநிறைவு, மகிழ்ச்சி, ஒற்றுமை, அன்பின் வளர்ச்சி ஆகியவை மலர்ந்து - கொள்ளை, திருட்டு, மோசம், துரோகம், வஞ்சகம் ஆகியவை மறையும் என்கிறார். இவை போன்ற சிந்தனைகள் எல்லாம் பெரியார் எத்தகைய மனித நேய மாண்பாளர் என்பதையே மீண்டும் மீண்டும் பறைசாற்றுகின்றன.

அஞ்ஞானம் - மெய்ஞ்ஞானம் - விஞ்ஞானம்

மேற்கூறிய மூன்று வகை நிலைப்பாடுகளில் நாம் - தமிழர்கள் அஞ்ஞானிகளே என்பது பெரியார் கருத்து.

ஞானம் என்றால் அறிவு, அஞ்ஞானம் என்றால் பகுத்தறியும் அறிவு அற்ற தன்மை. இன்றைய மனிதர்களாகிய நாம் பெரும்பாலும் அஞ்ஞானிகளே. இதற்கு என்ன காரணம்?

நாம் இயற்கைத்தன்மைகளைப் பற்றி அறியாது அதற்கு மாறுபாடான கடவுள், மதம், தெய்வீகம், முன்னோர் கண்ட முடிவு என்பனவற்றின் அடிமைகளாகிவிட்டதன் காரணமாக மெய்ஞ்ஞானம் என்பது நம்மை அணுகாமலே போய்விட்டது. மெய்ஞ்ஞானம், அஞ்ஞானம் என்ற

சொற்களுக்கு உண்மையான பொருள் என்னவென்று பார்த்தால் மெய்ஞ்ஞானி கவலையற்றவனாகவும், அஞ்ஞானி கவலை கொண்டவனாகவும் இருப்பான் என்பது தெளிவாகிறது.

கவலை என்பதன் பொருள் பேதநிலை என்கிறார் பெரியார். கவலை அற்ற என்பதன் பொருள் பேதமற்ற (அபேத) நிலை என்பதேயாகும். மனிதன் பகுத்தறிவு உள்ளவனாக இருந்தால் அவன் கண்டிப்பாக வேறுபாடற்ற நிலையில் உள்ள மெய்ஞ்ஞானியாகவே இருப்பான். ஆனால் அவன் அவ்வாறின்றிப், பகுத்தறிவற்றுப் பேதநிலையிலேயே நிற்கிற அஞ்ஞானியாகவே உள்ளான்.

மக்கள் நலம் பெற அஞ்ஞான ஆட்சியை ஒழித்து, மெய்ஞ்ஞான ஆட்சியை நிலவச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வது – நோயாளி பிழைக்க அவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது போன்றது. இது ஜீவகாருண்ய செய்கையாகுமே தவிர, தவறான செயல் ஆகாது என்பது பெரியார் கருத்து. இந்தக்கருத்தில்தான் இந்நிலை அடையப் பல நாடுகளில் பெரும்புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன ; ஏற்படவும் இருக்கின்றன. இதைச் சமுதாய அறுவைச் சிகிச்சை என்றார் பெரியார்.

இவ்வாறு மக்கள் கவலை, துக்கம், குறை அற்று வாழ்கிறார்களா என்பதை மேற்பார்வை செய்வது மெய்ஞ்ஞான ஆட்சியாகும். நமது நாட்டு ஆட்சி சரித்திரகாலம் தொட்டு 'மேல் சாதிக்காரன்' என்பவன் ஆதிகாலத்தில் செல்வந்தரிடத்திலிருந்து வந்திருக்கிறான். சமுதாய வேறுபாட்டை ஒழிக்க முற்பட்ட அரசியல் கட்சியை ஆதிக்கவாதிகளும் அவர்களது அடிமைகளும் தேசத்துரோகக் கட்சி என்றும் வெள்ளையனின் அடிவருடிகள் என்றும் கூறிப் பாமர மக்களை ஏமாற்றி ஏய்த்துப் பதவிக்கு வந்து விட்டார்கள். செல்வந்தர்களை ஒழிக்க என்று ஏற்பட்ட அரசியல் கட்சிகளைக் கையூட்டுக் கொடுத்துச் சரி செய்து கொண்டார்கள்.

இந்த நிலை சிறிது சிறிதாக மாறி மக்களுக்கு நன்மை செய்ய விரும்பும் அரசியல் கட்சி உருவாகியுள்ளது. அதன் ஆட்சி மெய்ஞ்ஞானப் பகுத்தறிவு ஆட்சி என்று சொல்லத் தகுந்தது. அச்சம், சமுதாய வேறுபாடு ஆகியவற்றை நல்ல வண்ணம் அழிக்கக் கூடியது, செல்வ வேறுபாட்டைப் படிப்படியாக ஒழிக்கக் கூடியதுமான ஆட்சி எனும் அன்றைய சமதர்மக் (சோசலிச) கொள்கையாட்சி பற்றியே தந்தை பெரியார் இங்குக் குறிப்பிடுகின்றார். இதை விஞ்ஞான ஆட்சியென்று மகுடமிட்டு மகிழ்கிறார். எனவே விஞ்ஞானத்திட்டம் கொண்ட ஆட்சியைக் கட்டுப்பாடாக ஆதரித்து

அஞ்ஞான மக்களின் எதிர்ப்பை ஆண்மையுடன் கண்டித்து எதிர்த்து ஒழித்து ஆக்கம் தர வேண்டும் என்றும் அப்போது வேண்டுகோள் வைத்தார் பெரியார்.

விஞ்ஞான நூல்களும் விஞ்ஞானப் பெயர்களும் வேண்டும்

மெத்த வளருது மேற்கே - அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை என்று பாரதியாரும் தன் கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

மருத்துவ நூல்களை எடுத்துக்கொண்டால் அதில் மருத்துவர் பிழைப்பதற்குத்தான் வழி இருக்கிறதேயொழிய நோயாளி பிழைக்க வழியில்லை என்ற நிலை.

வான நூல்களை எடுத்துக்கொண்டால் சமயத் தொடர்பான புராணப் புளுகுகளும், ஆபாசங்கள், நூற்றுக்குத் தொண்ணூறு வடநாட்டிலிருந்து இறக்குமதியான சோதிடப்புரட்டுகளும் அதன் தொடர்பான குப்பை கூளங்களும் உண்டே தவிர அறிவுக்கு விருந்தாக எதுவுமில்லை.

தொழில்துறை நூல்களை எடுத்துக்கொண்டால் விஞ்ஞான முறைப்படி எழுதப்பட்ட நூல்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்றால் உலக்கை, உரல், ஆட்டுக்கல், குழவிக்கல், மரச்செக்கு, மாடு சுற்றுதல், தோல்பரி, ஏற்றம், மாடுகள், முன்பின் கவாத்து, கைத்தறி, கைராட்டை பரிமணை, வண்டிமாடு, தேர், ரதம், எழுத்தாணி, பனை ஓலை, சக்கி முக்கிக்கல், மண்பாண்டத் தொழிலாளி செய்த அகல்விளக்கு, எண்ணெய்த் திரி, கொம்பு, தப்பட்டை, ஊதுகுழல், மத்தளம் இவைதானே இருக்கின்றன.

விஞ்ஞானநூல்களாக - ஜபம், தபம், மந்திரம், தபோமகிமை, ஞானதிருஷ்டி, தெய்வீக சக்தி போன்ற காட்டுமிராண்டித்தனங்களைவிட காரிய சித்திக்கு அனுபவத்திற்கேற்ற சாதனம் இவற்றில் எது உண்டு என வினாத் தொடுக்கின்றார் தந்தை பெரியார்.

அனைத்தையும் அறிவியல் மயமாக மேல்நாட்டுமுறைகளைக் கொண்டு செய்து அனைத்திலும் மேல்நாட்டுக்காரர்களை முன்னோடிகளாகக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதே தந்தை பெரியாரின் ஒரே ஆவலாக இருந்தது.

காலவேகத்தில் கலந்து விட வேண்டும்

தந்தை பெரியாருக்கு எல்லையற்ற மனிதாபிமானம் இருந்ததைப் போன்றே அளவற்ற அறிவியல் தாகமும் இருந்தது. அவரது எழுத்திலும் பேச்சிலும் அது ததும்பி நிற்கும் காட்சியை இன்றும் நாம் கண்டு வியக்க முடிகிறது. மகிழ இயல்கிறது. அவரது சொற்களிலேயே பார்த்தால் அந்தத் தாகமும், வேகமும், அழுத்தமும் எடுத்துக்காட்டுகளும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

> "என் பேச்சும் இந்தக் கூட்டமும், உங்கள் இருக்கையும் காலப்போக்கைப் பொறுத்தவையே தவிர என்னையோ, உங்களையோ பொறுத்தவை அல்ல. காலப்போக்கை அறியாத பட்டிக்காட்டார் பாமரத்தனம் கொண்டவர்கள் ஆகியவுர்கள்தான் - மாறுதல் என்னாலும் உங்களாலும் ஆனதாகக் கருதுவார்கள். ஆனால் அவர்களும் அறிவு, அனுபவம் பெற்றவுடன் காலப்போக்குத்தான் காரணம் என்பதை உணர்ந்து கொள்ளுவார்கள். ஆனால் அதற்குக் கொஞ்சநாள் பிடிக்கும். உதாரணமாக அந்தக் கொஞ்சநாள் பிடிக்கும் என்பதுதான் புரட்சிக்காரர்கள் என்பவர்களுக்கும் வைதீகர்கள் மாறுதல் வேண்டாதவர்கள், பழமை விரும்பிகள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதாவது வாலிபர்களுக்குப் புதுமை சீக்கிரம் தோன்றும்; சீக்கிரம் பிடிக்கும். காரணம் அவர்கள் உள்ளம் எழுதாத வெறும் சிலேட்டுப் போன்றது. வயதானவர்கள் உள்ளம் பல சங்கதிகள் எழுதப்பெற்றது. புதிய தன்மைகள் பதியப்பட வேண்டுமானால் முன்னால் பதிந்தவைகள் அழிக்கப்பட வேண்டும். அவைகள் சுலபத்தில் அழிக்க முடியாத மாதிரி ஆழப் பதிந்து போயிருக்கும். இதைத்தான் வைதீகம் என்றும், பிடிவாதம் என்றும், காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்ள முடியாமை என்றும் பெரிதும் சொல்லுகிறோம்."

மனிதன் அறிவியல் அறிவைப் பெற்றவனாக மாற வேண்டும். அதற்கு அவன் என்றும் மாறாததாகிய மாற்றத்தை ஏற்கும் துணிவு பெற வேண்டும் என அங்கலாய்க்கிறார். கடவுள் எண்ணமோ, மனிதசக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்தி என்கிற எண்ணமோ மனிதனுக்கு இல்லாமல் இருந்திருக்குமானால் - இன்று மனிதன் குறைந்தது இந்த மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளில் அவனது அறிவின் பயனாய், சிந்தனைசக்தியின்

பயனாய் ஐந்நூறு ஆண்டுகளாவது உயிர்வாழத் தக்க தன்மையை அடைந்திருப்பான்; சிறகுகள் இல்லாமலேயே விண்ணில் பறக்கும் வலிமையைப் பெற்றிருப்பான் என்பதோடு, கவலை இல்லாத வாழ்க்கை வாழும் வகையை அடைந்திருப்பான் என நெஞ்சூறி நிற்கிறார். இக்கருத்தில் மனித நேயமும் அறிவியல் ஆர்வமும் போட்டி போட்டு நிற்பதைக் காண முடிகிறதல்லவா?

சர்வ சக்தியுள்ள கடவுள் ஒன்றுண்டு. எல்லாம் கடவுள் செயல் எனக் கருதுவோரில் யாருக்குத் துக்கமும், ஏமாற்றமும், கவலையுமில்லாமல் இருக்கிறது, கூறுங்கள்? என்று எக்காளமிடுகிறார் பெரியார்.

இந்தியாவிலிருந்து அமெரிக்கா சுமார் பத்தாயிரம் கல் தொலைவில் உள்ளது என்றால் ஒன்றரை நாளில் அங்கே சென்று விடலாம். எட்டு மணிநேரப் பயணம்தான். போக எட்டு மணி அங்கே வேலையைப் பார்க்க எட்டுமணி, திரும்பி வர எட்டுமணி, நமக்கும் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று ஆக இருபத்து நான்கு மணியில் ரஷ்யாவிற்குச் சென்று திரும்பிவிடலாம். அறிவியல் வளர்ச்சி காரணமாக இன்று உலகம் அருகில் வந்து கொண்டுள்ளது என்றால் இது உண்மைக்கு மாறானதா?

எழுத்துச்சீர்திருத்தம்

இன்று நாம் பயன்படுத்திவரும் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் 247. தொடக்கத்தில் இவை அனைத்தும் இதே வடிவத்தில் தோன்றியிருக்காது என அனைவரும் அறிவர். பல காலகட்டங்களில் பல்வேறு மாற்றங்களை அடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையிலும் மாற்றம் வேண்டும். தொகையிலும் பயன்படுத்தும் வகைகளிலும் மாற்றங்களோடு எண்ணிக்கையிலும் குறைக்க வேண்டும். எளிதாக எழுதுவதற்கு வழிவகை காண வேண்டும் என்று ஆய்வு மேற்கொண்டவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் வீரமாமுனிவர், தந்தை பெரியார் ஆகியோர் ஆவர்.

இவர்களுள் வீரமாமுனிவர் அவர் அளவில், அவர் காலத்தில் சில மாற்றங்களைத் தமிழ்மொழியின் எழுத்துத்தொகுதியில் (Tamil Alphabet) கொண்டு வந்தார். சில பயனுடையதாகவே இருந்தன. நடைமுறைக்கும் வந்துள்ளது.

தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் இவர்களது முறையை விடத் தனித்தன்மை வாய்ந்தது. மக்களின் பயன்பாட்டை மட்டும் அடிப்படையாகக் கொண்டது. கையால் எழுதுவதற்கும், தட்டச்சுப் பொறியில் – இன்று கணிப்பொறியில் கையாளுவதற்கும் ஏற்ற முறையில் அமைந்துள்ளது. அவரது நடைமுறை அறிவியல் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் அனைவரும் எழுத வேண்டும் என்று தமிழக அரசு ஆணையிட்டமை (1978) குறிப்பிடத்தக்கது.

தந்தை பெரியாருக்கு 1934களில் தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் ; அதுவும் தர்க்கரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் இருக்க வேண்டும் என்ற சிந்தனை அரும்பியது. 13.1.1935 முதலே அவர் பதிப்பித்த பத்திரிகைகள், புத்தகங்களில் தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தத்தை அவரே நடைமுறைக்குக் கொண்டு வந்தார் என்பது இங்கு மனம் கொள்ளத்தக்கதாகும்.

உலகமொழிகள் பெரிதும் சத்தம், குறி வடிவம், எழுத்துகளின் குறைப்பு, எழுத்துகளின் சேர்ப்பு ஆகியவற்றில் மாற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றன. காலத்திற்கேற்ற வண்ணம் சத்தங்களும் மொழிகளும் உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும்.

ஆகவே, இப்போது ணா, றா, னா ஆகிய எழுத்துகளும் ணை, ளை, னை ஆகிய எழுத்துகளும் மற்ற கா, நா, ரா முதலாகிய எழுத்துகளைப் போன்றும் டை, நை, ழை முதலிய எழுத்துகளைப் போன்றும் ஆகாரத்திற்கு 'ா' குறியையும், ஐகாரத்திற்கு 'ை' குறியையும் பெறாமல் தனிவடிவத்தைக் கொண்டு இருப்பதை மாற்றி ணா, றா, னா, ணை, லை, ளை, னை போலப் பயன்படுத்திப் பிரசுரிக்கலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இதனால் அச்சுக் கோப்பதற்கு எழுத்தறைகளில் 7 அறைகள் குறைகின்றன என்பதோடு, பிள்ளைகளுக்கும் இந்த ஏழு எழுத்துகளுக்கும் தனிவடிவம் நினைவில் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லாமல் போகும் வசதியும் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கூறியவாறே குடி அரசு பத்திரிகையை அச்சிடவிருப்பதாகவும் 'பகுத்தறிவு' என்ற தன்னுடைய இதழில் 30.12.1934 அன்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார் பெரியார்.

எழுத்துகளின் உருவத்தை மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது புதிய எழுத்துகளைச் சேர்ப்பது என்பது போலவே சில தேவையற்ற எழுத்துகளை நீக்க வேண்டியதும் அவசியம் என்றார் பெரியார்.

எடுத்துக்காட்டாக, தமிழ் உயிர்களில் ஐ, ஔ என்ற இரு எழுத்துகளும் தேவையில்லை. அவற்றிற்கு மாற்று உண்டு என்பது அவர் கருத்து.

ஐ - காரம் வேண்டிய எழுத்துகளுக்கு 'ை', குறியைச் சேர்ப்பதற்குப் பதிலாக - ய் என்ற எழுத்தைப் பின்னால் சேர்த்துக் கொண்டால், ஐ-கார ஒலி தானாகவே வந்து விடுகிறது. எடுத்துக்காட்டாக, கை என்பதற்குப் பதிலாகக் 'கய்' என்று எழுதினால் ஒலி மாறுவதில்லை என்பது விளங்கும்.

இது போலவே, ஔகாரத்திற்கும் கௌ என்பதற்குப் பதிலாகக் கவ் என்றோ, கவு என்றோ எழுதினால் ஒலி மாறுவதில்லை.

கௌமதி - கவ்மதி - கவுமதி என்கிற ஒலிகள் ஒன்றுபோலவே உச்சரிக்கப்படுவதைக் காணலாம். இந்த வகையில் ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துகளை உயிரெழுத்துகளிலேயே குறைத்துவிட்டால் அதனால் பெரிய அனுகூலமே என்பது கருத்து.

ஆங்கில மொழியால் நமக்கு ஆக்கம் உண்டு என்பதைத் தன் நுண்மாண் நுழைபுலத்தால் அறிவுறுத்துகின்றார் தந்தை பெரியார்.

ஆங்கில மொழிநூல்களில் முன்னேற்றக் கருத்துகள் மலிந்து கிடக்கின்றன.

விஞ்ஞான ஆராய்ச்சி அறிவு நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் இருக்கின்றன.

நமது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளப் பல அரிய வழிகளைப் பெரும்பாலும் ஆங்கில நூல்களிலிருந்தே அறிந்து வருகின்றோம்.

'அடிமை வாழ்வே ஆனந்தம்' என்று நினைத்திருந்த இந்திய நாட்டு மக்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டியதே ஆங்கிலமொழி அறிவுதான்.

மன்னன் வேண்டாம் ; குடியரசு வேண்டும்
சனாதனம் வேண்டாம் ; சமதர்மம் வேண்டும்

ஆண் பெண் சமம், அரசியல் பொருளாதார முன்னேற்ற அறிவுக்கருத்துகள் ஆகிய அறிவுக் கூறுகள் எல்லாம் ஆங்கிலத்திருந்தே பெற்றோம் என்பது தந்தை பெரியாரின் உறுதியான சிந்தனை ஆகும்.

தந்தியையும், மின்சாரத்தையும் படக் காட்சியையும், ஆகாய விமானத்தையும் வானொலியையும், எக்ஸ்ரேயையும் ஆங்கிலம்தான் அறிமுகப்படுத்தியது. நமது தமிழ்மொழியோ வடமொழியோ அன்று.

வடமொழித் தொடர்பு – சாஸ்திர புராண இதிகாச மூட நம்பிக்கைகள் பகுத்தறிவை அடிமைப்படுத்தின. ஆங்கிலமொழி நம்மை அவ்வடிமைத் தளையிலிருந்து விடுவித்து எதையும் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப் பார்க்கும்படிச் செய்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத, வெளிப்படையான, பட்டறிவுக்கு ஒவ்வாத, சரித்திர காலத்திற்கு உட்படாத எதையும் ஒதுக்கித் தள்ளும்படி செய்தது ஆங்கிலம். ஆங்கிலம் தமிழைக் காட்டிலும் மிக வேகமாக அறிவுலகத்தை நோக்கி அழைத்துச் செல்லுகிறது. ஆங்கிலேயன் சந்திர கிரகத்திலிருந்து ஒலி கேட்கிறான். வடமொழியாளன் இங்கு ஈரேழு பதினான்கு லோகங்களையும் காட்டித் திவசமந்திரம் படிக்கிறான். எவ்வளவு வேற்றுமை! என வியக்கிறார் தந்தை பெரியார்.

அறிவு வளர்ச்சிக்குப் பெரும்பாலும் சுற்றுச்சார்புதான் காரணம் என்பது தந்தை பெரியாரின் அழுத்தமான கருத்து. இதற்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டு தருகிறார். ஒரே தந்தைக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று இந்நாட்டிலும் ஒன்று இங்கிலாந்திலும் வளர்ந்தால் இங்கிலாந்தில் வளர்ந்த மகன் இந்தியாவில் வளர்ந்த மகனை விடப் பல மடங்கு அறிவு விசாலம் படைத்தவனாக இருப்பான். அவன் எதையும் விஞ்ஞானக் கண்கொண்டு பார்ப்பான்.

கலைச்சொல்லாக்கத்திலும் தந்தை பெரியார் தன் தனி முத்திரையைப் பதித்துள்ளதும் இங்கே நினைவு கொள்ளத் தக்கது.

கலைச் சொல்லாக்கக் குழுவினர் கண்டு பிடித்த சொற்களைக் கண்டால் இது விளங்கும். Electrolysis, Hydrogen, Disinfectant என்பனவற்றிற்கு முறையே – வித்யுக்தியோகம், ஆப்ஜனகம், பூதிநாசினி என்று புதுவார்த்தைகளைத் தோற்றுவித்துள்ளார்கள். இதனால் ஆங்கிலச் சொற்களுக்கு மாற்றான வடமொழிச் சொற்களைத் தோற்றுவித்துள்ளார்கள். இதை விட சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் கண்டுபிடித்த சொற்கள் முறையே மின் பருக்கை, நீரகம், நச்சு நீக்கி என்பனவாகும். இச்சொற்களே சிறப்பாக இருப்பதை எளிதில் யாரும் அறியலாம். சென்னைத் தமிழ்ச் சங்கத்தாருக்குள்ள தமிழ்ப்பற்று கலைச்சொல்லாக்கக் குழுவினருக்கு இல்லாது போனது இங்கு நினைவிற்கொள்ள வேண்டியதாகும்.

நமக்கு எம்மொழித் தொடர்பிருந்தாலும் பரவாயில்லை. வடமொழித் தொடர்பு மட்டும் தேவையில்லை என்பதில் தந்தை பெரியார் உறுதியாக நின்றார். காரணம் - தமிழ் ஒன்றுதான் இன்றுவரைக்கும் வடமொழிக்கலப்பை ஓரளவுக்காவது எதிர்த்து வந்திருக்கிறது. வேற்றுமொழிக்கலப்பின்றித் தனிச்சிறப்புடன் வாழக்கூடிய தன்மையைத் தமிழ் பெற்றிருக்கின்றது என்று மேனாட்டு அறிஞர் கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார் பெரியார்.

எனவே, தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் இதைக் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப் பட வேண்டும்.

''இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி. வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது; மற்ற மொழிகளைப் போல் திருத்தப்படாதது'' என்ற கருத்து ஒரு மொழிக்குக் குறைவாகும். இது பெருமை அல்ல என்பது தந்தை பெரியார் கருத்து. இதற்குப் பெயர்தான் மாற்றி யோசித்தல். அவர்தான் பெரியார்.

பிறர் எளிதாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளவும் எளிதாக அச்சுக்கோக்கவும், தட்டச்சுச் செய்யவும், தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்பது தந்தை பெரியாரின் ஆணித்தரமான கருத்தாகும்.

துருக்கியின் தலைவர் முஸ்தபா கமால்பாட்சா எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றினார். மற்ற அனைத்தையும் மாற்றியதைப்போல ஏற்கெனவே இருந்த எழுத்துக்களை ஒழித்துவிட்டு, ஆங்கில மொழி எழுத்துக்களை எடுத்துக்கொண்டார். அதனால் கற்பதற்கு மிக வசதியும், எளிமையும் ஏற்பட்டு விட்டது. அய்ரோப்பாவில் பெரியார் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சோவியத் யூனியன் முதல் போர்ச்சுக்கல் வரை சுமார் பத்து, பதினைந்து நாடுகளிலும் எவ்வளவோ மொழிகள் இருந்தும் அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி ஒலி கொண்ட மொழிகள் இருக்குமானால் அவற்றிற்கேற்ப 2 அல்லது 3 புதிய உருவ எழுத்துகளைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேல்நாடுகளில் எழுத்துகள், எழுத்துக்கூட்டும் முறைகள், இவற்றில் மாற்றம் செய்வதால் இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படுவதாயிருந்தாலுங் கூடத் துணிவாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரியார் குறிப்பிடும்

மாற்றங்களுக்கு மேலே கூறப்பட்ட குற்றங்குறைகள் இல்லை என்பதை நாம் கருத்தில் இருத்த வேண்டும்.

தமிழ் எழுத்துகள் எப்படியும் குறைக்கப்பட வேண்டும். அச்சுக்கோக்கவும், தட்டச்சுச் செய்யவும் தமிழ் மொழியும் ஆங்கிலத்தைப் போல் எளிதாக்கப்பட வேண்டும். கற்கும் குழந்தைகள் அவற்றை மூன்று மாதங்களில் படிக்கத் தொடங்க வேண்டும். இதுவே பெரியாரின் ஆசையாக இருந்தது.

தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். அனேக பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களேயல்லாமல், ஒருவர்கூட அம்முயற்சிக்கு ஆதரவு அளிக்கவில்லை அல்ல எனப் பெரியார் ஆதங்கத்தோடு குறிப்பிட்டிருப்பதை மறவாமல் நினைவில் கொள்ள வேண்டும்.

இனிவரும் உகைம்

தந்தை பெரியாரின் சிந்தனைகளும், அதன் விளைவாய் எழுந்துள்ள கருத்துகளும் அறிவியல் எனும் செந்தேனில் ஊறவைக்கப்ட்ட பலாச்சுளைகள். இவை ஏதோ காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப அவ்வப்போது அவருக்குத் தோன்றியதல்ல. அவர் எப்போது பேசினாலும் எழுதினாலும் பகுத்தறிவும், அறிவியலும் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்படும். காரணம் அடிப்படையிலேயே அறிவியல் சிந்தனையாளராக அவர் விளங்கி வந்திருந்ததேயாகும்.

பழையனவற்றை ஏற்கும் அளவுக்கு, நற்பயன் தரவேண்டிய அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தேவை என்பதை வலியுறுத்துவதில் அவர் பின் வாங்கவில்லை. ஆனால் புதியனவற்றில் முயற்சியும் ஆராய்வதில் ஆர்வமும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அவற்றால்தான் இயற்கையைப் படிப்பது என்பதோடு புதியனவற்றைக கண்டுபிடிப்பதும் முற்போக்கு அடைவதும் (Invention Progress) எளிதில் சாத்தியமாகலாம் என்பது தந்தை பெரியாரின் கருத்தாகும். இது,

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

எனும் நன்னூலார் கூற்றை அப்படியே வழி மொழிவதுபோல் உள்ளதல்லவா?

இனி வரும் உலகம் என்ற சிந்தனை ஏதோ நாளைக்கு மட்டும் பொருந்துவதல்ல ; இந்தப் பிரபஞ்சம் இருக்கும்வரை அதிலிருந்து உலகில் மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்பதை உள்ளடக்கியது. இக்கருத்தைக் குறிப்பிடுவதுதான் தந்தை பெரியாரின் *இனிவரும் உலகம்* என்ற சிறியநூல். அவருடைய கருத்துக்கள், நூல்கள் எல்லாம் பல நூற்றாண்டுகளை உள்ளடக்கிய ஒரு மருந்துறை (Capsule) என்றார் பேரறிஞர் அண்ணா.

அதில் அவரின் வேகமான ஆராய்ச்சி பட்டறிவுபூர்வமான கருத்துகளும் படிப்போரை வியக்கவும் மெய்சிலிர்க்கவும் வைக்கும்.

நம்முடைய பண்டிதர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களின் படிப்புத்தான்; அறிவுக்குறைவல்ல. தவறிக்கீழே விழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரில் விழுந்தால் எப்படி அதிகக் காயம் ஏற்படுமோ அதுபோல் புராண இதிகாசக் கலைச்சேற்றில் விழுந்த பண்டிதர்களுக்கு இயற்கை அறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ்படுத்தும் வகையில் மூட நம்பிக்கைகள், சமயம் எனும் நச்சரவங்கள் அவர்களைக் கரையேற விடாமல் சுற்றிக்கொண்டுள்ளன என்று அவர்கள் மீதான பரிதாபத்தைப் பெரியார் வெளிப்படுத்தியுள்ளார்.

அறிவியல் உலகுக்குப் பயன்பட வேண்டிய அறிஞர்கள் சிந்தனைகள் எல்லாம் புராண இதிகாசங்களைப் படித்துச் சொற்பொழிவாற்றவும் எழுதவும் பயன்படுகிறதே என்ற குறையை வெளிப்படுத்தியவர் இனி ஆக்கபூர்வக் கருத்துகளை எதிரதாகக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும், சிந்தனையும் கண்டுபிடிப்புகளும் தேவையாக இருக்கின்றனவோ அதுபோல் மக்களின் ஓய்வுக்கும் உடற்பயிற்சிக்கும் மகிழ்ச்சிக்கும் சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் சாதனங்களும் அவற்றைச் சுலபமாகச் செய்ய வசதிகளும் கண்டுபிடிப்புகளும் நாளுக்கு நாள் மாற்றமடைவதும் தேவை.

நம்முடைய கவிஞர்களும், ஓவியர்களும், நாவலர்களும், சிற்பிகளும் போட்டி போட்டுக் கொண்டு புதிய உலகை உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர் களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும். மற்றவர்கள் அலட்சியப்படுத்தப்படுவார்கள்.

போக்குவரத்துத் துறையைப் பொருத்த அளவில் எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனங்களாகவே (இன்று நடைமுறைக்கு வந்துள்ள ஆகாய விமானத்தை விடவும் அதிவேக விமானங்கள், போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் போன்றவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளலாம். பிறகு ஆராய்ச்சிக்காக விண்வெளியையும் தாண்டி, சந்திரனுக்குள் சென்றிருக்கும் சந்திராயன் ஏவுகணை வரைக்கும் எடுத்துக் கொள்ளலாம்) இருக்கும் என்றார்; இன்று இருக்கின்றன.

கம்பியில்லாத் தந்திச் சாதனம் (செல் பேசிகள்) ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும் என்றார். இன்று நாம் வைத்திருக்கின்றோமே!

வானொலி ஒவ்வொருவர் தொப்பியிலும் இருக்கும் என்றார். தனித்துச் செல்வோரும், மோட்டார் வாகனங்களில் செல்வோரும் ஏதோ ஒரு வகையில் - அளவில் வானொலியைக் கேட்டுக்கொண்டு தானே சென்ற வண்ணம் உள்ளனர்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து ஆளுக்கு ஆள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும் என்றார். இன்று ஒவ்வொரு இல்லந்தோறும் நடைமுறையில் உள்ளதே. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள தன் மகளோடு இங்குள்ள அவர் தம் தந்தை முகம் பார்த்துப்பேசிச் சேமலாபங்கள் பற்றிக் கலந்துரையாடுகிறாரே! இந்தியாவில் உள்ள ஓர் இன்றியமையாத அறிஞர் அல்லது தலைவர் உலகத் தலைவர்களோடும், மக்களோடும் உரிய சாதனத்தின்வழிப் பேசுகிறாரே! அதற்குத் தொலைக் கருத்தரங்கங்கள் (Teleconferences)எனப் பெயர் சூட்டியுள்ளோமே.

மேற்கண்ட சாதனங்களில் ஒரு இடத்திலிருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க வசதி ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிலிருந்து முதன்முறையாக இந்த முறையிலே அகில உலக மக்களுக்கெல்லாம் கல்வியளித்து வருகிறது, புதுதில்லியில் உள்ள இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம்.

பிள்ளைப்பேற்றைப் பொறுத்தவரை ஆண், பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். சிறந்த உடல்நலனுடன், அறிவு நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள குழந்தைகள் பிறக்கும் வண்ணம் பொலிகாளைகள்போல் தேர்ந்தெடுத்த மணிகள் போன்ற "பொலிமக்கள்"

வளர்க்கப்பட்டு அவர்களின் வீரியத்தைப் பெண்களின் கருப்பையின் உட்செலுத்தி (Injection) நல்ல குழந்தைகள் பிறப்பிக்கப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தைப் பிறப்புக்கும் தொடர்பே இல்லாமல் செய்யப்பட்டு விடும் என அறுதியிட்டு உரைத்தார். இன்று இம்முறை அங்கிங்கெனாதபடி எங்கும் நடைமுறையில் உள்ளதே!.

இவற்றையெல்லாம் தெரிவித்துவிட்டு இவற்றிற்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல் அவர் குறிப்பிட்டதையும் சேர்க்க வேண்டும். இவ்வளவு மாறுதல்களோடு இனி வரும் காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள அரசுடைமை நீதி, நிர்வாகம் கல்வி முதலிய பலதுறைகளிலும் இப்போது எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவோ, அம்முறைகளுக்கெல்லாம் தேவையில்லாமல் போய்விடும் என்பதுடன், அவை தொடர்பான இன்று (1940களில்) நிலவும் பல கருத்துக்கள் பொருளற்றவையாகிவிடும்.

புதிய உலகில் மோட்சத்திற்கும் நரகத்திற்கும் இடமில்லை. காரணம் நன்மை – தீமை செய்ய இடமில்லையே. எவருக்கும் யாருடைய நன்மையும் தேவையும் வேண்டப்பட்டது. புத்திக்கோளாறு இருந்தால் ஒழிய ஒருவன் மற்றொருவனுக்குத் தீமை செய்ய மாட்டான். ஒழுக்கக்கேட்டுக்கு வாய்ப்பே இருக்காது. எனவே மோட்ச – நரகத்திற்கு வேலை இல்லை. மனிதர்களும் இல்லை.

மக்கள் தேவைக்கேற்ற எந்திரத்தேவை

வாழ்க்கைக்காக எவ்வாறு உழைப்பது என்ற கவலை அரும்பத் தொடங்கிவிடுகிறது. அதன் காரணமாக முயற்சி தோன்றுகிறது. சுகம் பெறுவதிலும், செல்வாதாரங்களைப் பெறுவதிலும் நீண்டநாள் வாழ்வதற்கான ஆராய்ச்சியும் முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும் அவற்றை உற்பத்தி செய்வதற்காக மனிதன் செலவிட வேண்டிய காலம் மிக மிகக் குறைவாகவே இருக்கும். எடுத்துக்காட்டிற்காகச் சிலவற்றைக் குறிப்பிடுகிறார் தந்தை பெரியார்.

மக்கள் முன்பு கொஞ்சமாக ஆடை அணிந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத்திற்குச் சுமார் 150 இழைகள் தான் நெய்ய முடிந்தது. இன்று மக்கள் முன்பை விடப் பலமடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும் அவ்வளவும் கிடைக்கும்படியான அளவுக்கு மேலே நெசவுத்துறையில் விஞ்ஞானம் முன்னேற்றமடைந்து, ஒரு

நிமிடத்திற்கு 45000 இழைகள் நெய்து வாங்கும்படியான எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'சிகரெட்' (Cigarette) பற்றிச் சிந்திக்கும் வேளையில் அக்காலத்தில் ஒரு நிமிடத்திற்கு இரண்டு, மூன்று தான் சுற்ற முடிந்திருக்கும். ஆனால் இன்று ஒரு நிமிடத்திற்கு 2500 ஓர் எந்திரத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதுவும் ஒரு பக்கம், புகையிலை போட்டால் மறு பக்கம் புகைவண்டியில் ஏற்றும்படியான வகையில் சிகரெட் பைகள் (Bags) கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டு விடுகின்றன என்பதோடு அந்தச் சிகரெட்டுக் கம்பெனியின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் சரியாகப் பதியவில்லையானால் பதியாத சிகரெட்டை எந்திரம் கீழே தள்ளி விடுகிறது! இப்படிப்பட்ட நுட்பமான எந்திரங்கள் 1944-ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது என்றால், இனி எதிர்கால எந்திர உலகம் எப்படி வளர்ச்சி பெற்றிருக்கும் என யூகிக்கத் தொடங்கினார்.

இவ்வாறே வாழ்க்கைத் தேவைகளுக்குரிய துறைகளில் எல்லாம் எந்திர சாதனங்கள் பெருகும். நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் ஆண்டுக்குப் பதினைந்து நாட்கள் உடலுழைப்புச் செய்வதாலேயே மக்களுடைய அவசியத்தேவைகள் அனைத்தும் நிறைவாகும் என்பது அவரது சிந்தனையாகும். அவர் எண்ணியபடியே துவைப்பது, எரிப்பது, சமைப்பது போன்ற வீட்டு வேலைகளுக்கும் நூற்பது, நெய்வது, காய்ச்சுவது, உருக்குவது போன்ற கனரகத் தொழில்களுக்கும் இன்னபிற அத்துணை மனித உழைப்புச் சக்திகளுக்கும் பன்மடங்கு மாற்றாக எந்திர சாதனங்கள் உதவிடக் கண்டோம் அல்லவா?

எந்திரங்கள் பெருக்கத்தால் மனிதன் வேலையற்றவனாகான்.

மேலே குறிப்பிட்டவாறு இரு வார வேலை வாய்ப்பிற்குப் பின்னர் மீதி ஐம்பது வாரங்களுக்கு அவன் வேலைவெட்டி இல்லாமல் சோம்பேறி ஆகிவிடுவானா? அதுதான் இல்லை. வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும், சிந்தனையும் கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும் மகிழ்ச்சிக்கும் சிந்தனைக்கும் ஆய்வுகளும், சாதனங்களும் அவற்றை எளிதாகக் கண்டுபிடிப்பதற்கும் அவற்றின் மாற்றங்களுக்கும், மீதி நேரத்தை மனிதன் செலவழிக்க வேண்டியிருக்கும் என்றார் பெரியார்.

இன்னும் ஒரு படி மேலே சென்று கூறுகிறார். எதிர்காலப்பணிகள் - வரையறுக்க முடியாத அற்புதங்களையும், வியப்புகளையும் கொண்டிருக்கும்

என்பதோடு - மக்கள் குறிப்பாகவும் சிறப்பாகவும் அறிவாளிகள், சிந்தனையாளர்கள், முற்போக்காளர்கள் ஆகியவர்களுக்கு எப்போதும் வேலைகள் இருந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்றுள்ளது (1940களில்) போல் கூலிக்கு வேலை செய்வதாக இருக்காது; இலாப நோக்கு வேலையாக இருக்காது; உற்சாகத்திற்காகவும், போட்டி – பந்தய உணர்ச்சித் தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் செய்யும் வேலைகளாக இருக்கும் என்று அறிவித்தார்.

இத்தகைய பணிகளைக் கண்ணுறும் குழந்தைகள் தம்முடைய வாழ்நாளில் தம்மை எத்தகைய பணிகளுக்கு ஒப்படைத்துக்கொள்ளலாம் என்றே சிந்திக்கும்.

எந்திரசாதனப் பெருக்கங்களால் சோம்பேறிகள் பெருகிவிடுவார்கள் என்ற அச்சம் வேண்டியதில்லை. அவர்களுக்கு ஒரு வேலை செய்யும்போது ஏற்படும் துன்பத்தை விடச் சும்மா இருந்து கொண்டு உண்டு மகிழ்வது பெருந்துன்பமாக இருக்கும்.

எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசை தீர வேலை கொடுக்க முடியாத காலமாக இருக்குமே ஒழிய அந்தக்காலம் வேலைக்கு ஆள் தேட வேண்டியதாகவோ - அவன் வேலை செய்யவில்லை இவன் வேலை செய்யவில்லை என்று கருதவோ, குறை கூறவோ வாய்ப்பு இருக்காது என்றார். கணினி யுகமாகிய இன்று நம் நாட்டில் மட்டுமல்ல - உலக நாடுகளிலும் வேலைஇல்லை என்ற நிலை மாறி வேலைக்கு ஆள் இல்லை என்ற நிலையிருப்பதை நாம் அறிகிறோம். ஒரு பக்கம் மக்கட் தொகைப் பெருக்கம் இருக்கிறது என்றாலும் இன்னொரு பக்கத்தில் வேலைவாய்ப்பில் பெருக்கமும் இருந்து வருகிறது.

ஒரு காலத்தில் வெள்ளாடை வேலை (White Colar job) களில் இளைஞர்களுக்கு ஈர்ப்பு இருந்தது. எனவே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருந்தனர். இன்று எந்த வேலையையும் செய்யத் தயாராகி விட்டனர். எந்தப்படிப்பையும் படிக்கத் துடிக்கின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகங்கள் காலாவதி ஆகிவிட்டன போன்ற தோற்றம் ஏற்பட்டு விட்டது. அரசுப்பணிகளை நம்பி இருந்த நிலை அன்று. தனியார் நிறுவனங்களை நோக்கிப்போகும் நிலை இன்று. காரணம் அங்கே வேலை நேரம் அதிகம் என்றாலும் கை நிறைய ஊதியம்.

மேலும், தனியார் நிறுவனங்களும் இட ஒதுக்கீட்டு முறையை (Reservation for Employment) ப் பின்பற்ற வேண்டும் என்ற கோரிக்கை

வலுத்து வரும் காலம் இந்தக் காலம். எனவே தந்தை பெரியாரின் எதிர்நோக்குப் பார்வை எல்லாத்துறைகளிலும் நடைமுறையாகிக் கொண்டிருக்கிறது என்பது ஒருதலை.

இழிவான வேலைகளுக்கும் எந்திரம்

இழிவான வேலைகள் என்ற மனப்போக்கு எந்தெந்த வேலைகளின் மீது உள்ளது? உடலால் செய்யப்படுவனவற்றிற்கு உள்ளதுவா? மனிதக் கழிவுகளை எடுத்தல், துலக்குதல், வீதி பெருக்குதல், பாரம் சுமத்தல், கைவண்டி இழுத்தல் போன்றவை. இன்று இவற்றிற்கும் எந்திரங்கள் வந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகைய பணிகளுக்கு எப்போதுமே பற்றாக்குறையும் தேவையும் இருந்து கொண்டே இருக்கும் என்று பெரியார் குறிப்பிட்டதும் ஆங்காங்கே இருந்து வருகின்றது.

கங்கை நீரும் திருட்டும்

இனிவரும் உலகத்தில் மற்ற ஏராளமான நன்மைகளோடு திருட்டு இன்மையும் ஒன்று என்பதைக் குறிப்பிடும் பெரியார் அதற்கு ஓர் அழகிய உவமையைக் குறிப்பிட்டுள்ளார். அப்படியே அது நம் நெஞ்சை அள்ளுகிறது! திருட்டுக்கும் இடம் இருக்காது. கங்கை ஓரத்தில் குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருட வேண்டிய அவசியம் ஏற்படுமா? என்பதுதான் அந்த அழகிய உவமை. அடுத்து அவர் குறிப்பிடுவது – அல்லது அவர்களது தேவைக்கு மேல் அதிகம் எடுப்பார்களா? நாளைக்கு வேண்டுமே எனச் சேகரித்து வைக்க முயற்சி செய்வார்களா? ஆகையால் தேவையுள்ள பொருள்கள் தாராளமாய் வழிந்தோடும்; திருட்டுக்கு இடமே இருக்காது; அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது. எதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய் பேச நேரிடும்? குடியினால் தீமையோ, கொலை செய்யும் எண்ணமோ இருக்காது. சூதாடுதல் போட்டி – பந்தயமாக இருக்குமே தவிர பண நாட்டமுடைய ஆட்டமாக இருக்காது என்றுரைத்தார். இவை இன்று நடைமுறையில் உள்ளதே!

மேலும், பணத்திற்காகவும், பொருள்களுக்காகவும் சோரம் போதல் நிகழாது. மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்படும் காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கியாள முடியாது. ஒருவரின் தயவுக்காக ஒருவர் இணங்கிவிட இயலாது. ஆணுக்கும், பெண்ணுக்கும் சம விருப்பம் இல்லாமல் காதல் துய்க்க மாட்டார்கள். உண்மைக்காதல் என்பதைத் தவிரப் புதுமைக்காகவோ,

மாறுதலுக்காகவோ ஆடவரும் பெண்டிரும் தங்களை மாற்றிக் கொள்ளும் போக்கும் ஏற்படாது. மேலும் உடல் நலம் பற்றிய அறிவும், கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் தலைதூக்கியிருக்கும். விருப்பம் இல்லாத தொடர்பில்லாத இடத்தில் இச்சை வைப்பது தனது சுயமரியாதைக்குறைவு என்றே ஆண் பெண் இருபாலரும் கருதுவார்கள் என்றார். இவைதானே இன்று நடைமுறை?

மூளைக்கோளாறான குணங்களை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால், அதற்கு மட்டும் பரிகாரம் தேட வேண்டிய தேவையிருக்கலாம் என்று புறனடையாக ஒரு கருத்தையும் சொல்லிச் சென்றுள்ளார் பெரியார்.

இவற்றோடு, வேறு சில மாற்றங்கள் பற்றியும் கூறிச் சென்றுள்ளார்.

அவைகளாவன

ஒரு டன் எடையுள்ள மோட்டார் கார் ஒரு அந்தர் (அக்காலத்தில் எடையளவு) எடைக்கு வரலாம்.

பெட்ரோல் எண்ணெய்க்கு மாறாக மின்சாரத்தைப் பயன்படுத்தலாம். அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம். மின்சாரத்தின் பயன் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும் மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரிவடையும், பெருகும் என்றார்.

விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்ப நுகர்வுக்குப் பயன்படும்படியான அற்புதப்பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல் எல்லா மக்களுக்கும் வசதி நல்கும் பொதுச் சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனிவருங்காலம் இருக்குமாகையால் இன்றைய உலக அமைப்பிலே உள்ள அரசு, உடைமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய துறைகளிலும் இப்போது எவையெவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவோ, அந்த முறைகளுக்கெல்லாம் தேவையிருக்காது. அவை தொடர்பான பல கருத்துக்களும் பொருளற்றதாய் விடும் என்றார்.

கடவுள், கதிமோட்ச, நரகங்களின் நிலை

கடவுள் மறக்கப்பட்டு விடுவார். ஒருவன் கடவுளை நினைப்பதற்கு ஏதாவது ஒரு தேவை இருக்க வேண்டும். அனைத்துக் காரண

காரியங்களுக்கும் மனிதனுக்கு விவரம் தெரிந்துவிடும். அனைத்துத் தேவைகளும் மனிதனுக்கு நிறைவடையும் வகையில் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டால், எந்த மனிதனுக்கும் கடவுளைக் கற்பித்துக்கொள்ளவோ, வணங்கவோ தேவை ஏன் ஏற்படுகிறது? உயிரோடு இருக்கும் இடமே மோட்சமாய்க் காணப்படுமானால் விஞ்ஞானத்திற்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் அவனுக்கு எதற்கு?

தேவையற்றுப்போன இடமே கடவுள் செத்துப்போன இடம் என்பது அறிவின் எல்லை. அறிவியல் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் எண்ணத்திற்கு இடம் ஏது? புதிய உலகில் மோட்சம் நரகத்திற்கு இடம் இருக்காது. நன்மை தீமை செய்ய இடம் இருந்தால்தானே மோட்சமும் நரகமும் வேண்டும்? என்பது பெரியாரின் தர்க்கவாதம்.

இனி வரும் உலகச் சிற்பிகள் யார்?

தந்தை பெரியாரின் அசைக்க முடியாத நம்பிக்கையைப் பாருங்கள்! மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கிவிட முடியும் என்ற ஆசையும் நம்பிக்கையும் கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு மனித சமுதாயத்தை நாளுக்கு நாள் முன்னுக்குக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கும். சுயசிந்தனைக்குத் தகுதியற்றவர்களே இந்த மாற்றங்களைக் கண்டு மிரளுவார்கள். காலம் வரவரக் கெட்டுவிட்டது எனக் கதறுவோருமாக இருப்பார்கள்.

பழைய முறைப்படி உள்ள அமைப்புகளின் வழிப் பயன் அடைந்த கூட்டம் புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சி செய்வது இயல்பேயன்றோ!

பாமரனின் ஞான சூனியம், சுயநலவாதியின் எதிர்ப்பு என்னும் இருபெரும் எதிரிகளைக் கண்டு கலங்காமல் பணியாற்றுவோரே இனிவரும் உலகைச் செதுக்கும் சிற்பிகள் ஆவர் என்று தன் ஆய்ந்த கருத்துகளை நிறுவியுள்ளார் தந்தை பெரியார்.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாகச் சமத்துவம் சமுதாயத்தில் உண்டாக வழி ஏற்பட்டு விட்டது. நாம் என்ன கூறினாலும் இனிமேல் நமது பின் சந்ததியர் பழைய தொழில்முறை, சாதி முறைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற அசைக்க முடியாத கருத்தைக் கொண்டிருந்தார் பெரியார். காரணம் உலகம் புதிய பாடத்தை அன்று கற்பித்து வந்தது. அறிவியல் வளர்ச்சி வழியாகவே விமோசனம் எதற்கும் உண்டு. பழைமை

சகல முறைகளிலும் மாறிச் சகல துறைகளிலும் புதுமை தோன்றியிருக்கிற காரணத்தால் வெகு விரைவில் புதிய உலகம் காணப்போகிறோம் என்று சூளுரைத்தார் பெரியார். இன்று கண்டு கொண்டோம்.

வேலை செய்யும் குதிரை வேறு ; குட்டி போடும் குதிரை வேறு

ஆண், பெண் புணர்ச்சிக்கும் பிள்ளைப்பேற்றிற்கும் தொடர்பில்லாமலேயே போகும் வழியை முன்னர்க் குறிப்பிட்டோம். அதே கருத்தை மற்றொரு எடுத்துக்காட்டாக மனம் கொள்ளும் வகையில் பெரியார் குறிப்பிட்டுள்ளார். அதாவது, வேலை செய்யும் குதிரை வேறு ; குட்டி போடுகிற-போடச் செய்கிற குதிரை வேறு என்கிற மாதிரி மனித சமூகத்தில் இருக்கும் என்றார். பிள்ளைபெறும் தொல்லை, வளர்க்கும் தொல்லை, அதற்குச் சொத்து சுகம் தேடும் தொல்லை ஒழிந்துபோகும் என்றார். இவை படிப்படியாகக் குறைந்து வருவதை இன்று காண்கிறோம்.

அறிவாளி யார்?

இன்றைய தினம் வாழுகின்ற நாம் நம்முடைய கடவுள்களைவிட அறிவாளிகள் என்பது தந்தை பெரியாரின் பிரகடனம். ஏனென்றால் நாம் கடவுள்களாக வாழாத – அவர்களுக்குத் தெரியாத – அவர்கள் சொல்லாத அறிவியல் காலத்தில் வாழுகிறோம். முற்காலத்தைப்போல் ஏமாற்றுக்காரர்களின் எண்ணம் ஈடேறும் காலம் இப்போது இல்லை. கடவுள் கொடுத்தார் என்று கடவுள் மேல் பழியைப் போட்டு ஆண்டுக்கொருமுறை அளவுக்கு மீறிய பிள்ளைகளைப் பெற்றுத் துன்பப்படுவது அறிவீனமே ஆகும். இது அறிவியல் காலம். ஆராய்ச்சியும் பகுத்தறிவும் மலிந்த காலம் என்றார்.

திரைப்படமா? கண்காட்சியா?

தந்தை பெரியார், சமூகத்தைப் பிடித்த நான்கு நோய்களில் திரைப்படம் ஒன்று (விதிவிலக்கான சிலவற்றைத் தவிர) எனக் குறிப்பிட்டார். அவற்றைப் பார்க்கச் செலவழிக்கும் நேரத்தை, பணத்தைக் கண்காட்சிக்குச் செலவழிக்க வற்புறுத்தினார். ஏனெனில், கண்காட்சிச் சாலைகளில் புதிய கற்பனைகள் பல மலர்ந்திருக்கும்; வாழ்க்கை வசதி மேம்பாட்டிற்கான பல புதிய கண்டுபிடிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். பல நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட நுண்ணிய கருவிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருக்கும். ஒவ்வொரு துறையிலும் எழுத்து, எந்திரம், கைத்தொழில், ஓவியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் பெரிய படிப்பினை தருவதாக அமைந்திருக்கும். கண்காட்சிச் சாலையில் ஒரு பக்கத்தில் நுழைந்து மறு பக்கத்தில் வெளி வருவதற்குள்

ஒருவன் அனைத்துத்துறைகளிலும் தன் அறிவை வளர்த்துக்கொண்டு விடுவான். அவன் உலகத்தின் முன்னேற்ற வளர்ச்சியைத் தன் கண்முன் கண்டுகளித்துத் தெளிவுபெறுகிறான். பல ஆய்வு நுணுக்கங்களை அறியும் வாய்ப்புப்பெறுகிறான். பல அதிசயக்கருவிகளைக் கண்டு அகமகிழ்கிறான்.

சுருக்கமாகக் கூற வேண்டுமானால், கலா சாலைக்குச் சென்று பல ஆண்டுகள் படித்துப் பெற வேண்டிய அறிவு வளர்ச்சியை அவன் அந்தக் கண்காட்சி மூலம் ஒரு சில மணிநேரத்திலேயே பெற்று விடுகிறான். கற்றலின் கேட்டலே நன்று; கேட்டலின் பார்த்தலே நன்று என்ற கொள்கையை எவ்வளவு நுட்பமாக அனைவருக்கும் அறிவு கொளுத்தியுள்ளார் பெரியார்!

அறிவியல் வளர்ச்சியின் அடையாளங்கள்

பல வியப்புகள் இப்போது அறிவியலாலும், பகுத்தறிவாலும் ஏற்பட்டிருக்கிறது. நம்முன் தோன்றும் செயற்கைக் குறைபாடுகளை ஒழிக்கத் துணை புரிகிறது. முன்னேற்றத் திட்டங்களில் முனைப்புக் காட்டுவதால் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக்கொள்ள இயலவில்லை. இத்தகைய அறிவியல் வளர்ச்சியின் அடையாளங்கள் நம் அன்றாட வாழ்வில் ஏராளம். சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறார் பெரியார்.

பிள்ளை பெறும் வாய் பெண்களுக்குச் சிறியதாக இருந்தால் அல்லது ஒரு குழந்தை குறுக்கே வளர்ந்திருந்தால் - பிறப்புத் தடை ஏற்பட்டு இறந்து போன தாயும் சேயும் ஏராளம். ஆனால் தற்போது பிள்ளைபெறும் துவாரத்தைக் கிழித்துப் பெரிதாக்கியும் வயிற்றைக் கிழித்தும் எடுத்த குழந்தைகள் உயிரோடு பிறந்து ஒன்றாய் எப்படி வளர்கிறது? என்று அகமிகமகிழ்ந்து குறிப்பிடும் பெரியாரின் பேருள்ளத்தை இங்கே காண்கிறோம். இத்துடன் மேலும் கூறுகிறார்.

"இவைகளுக்கெல்லாம் விஞ்ஞானமுறையில் காரணங்கள் இருக்கின்றனவா? இல்லையா? இந்த விவரங்களைச் சரியாக அறியாத மக்கள் தானே கடவுள் இருக்கிறது என்று கருதுகிறார்கள்?"

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒருவன் ஓர் ஊருக்குப் போக வேண்டுமானால் பஞ்சாங்கத்தைப் பார்ப்பான். அதே மனிதன் இப்போது பயணம் செய்ய வேண்டுமானால் புகைவண்டிகளின் கால அட்டவணையை (Railway Guide) பார்க்கிறான்.

மனிதனின் இயற்கை, முற்போக்குத் தன்மையையும் அறிவாராய்ச்சி வளர்ச்சியின் உண்மையையும் அறிந்த பிறகும் அவ்வளர்ச்சியை மேலும் மேலும் விரும்புகின்ற நிலையில் மக்களின் உடல் துன்பத்தை உணர்ந்து அதைக் குறைக்க வேண்டும் என்கிற ஆசையில் முயற்சி செய்து கொண்டே போகும் எந்த மனிதனும் எந்திரத்தை வெறுக்கவே முடியாது. அன்றியும் வரவேற்றேயாக வேண்டும்.

முன்பு மனிதன் அய்ம்பது மைல்களை உடைய இடங்களைக் கூடத் தெரிந்திருக்க மாட்டான். இன்று அறிவியல் வளர்ந்துவிட்ட நிலையில் அமெரிக்காவின் அன்றாட நிகழ்ச்சிகளைக் கூட அவ்வப்போதே அறியச் சாதனங்கள் வந்து விட்டன. நாம் இதைக் கற்காவிட்டால் திரும்பவும் காட்டுமிராண்டிக் காலத்திற்கே போய்விடமாட்டோமா எனக் கேள்விக்கணை தொடுத்துள்ளார்.

இன்று மனிதன் தன் வாழ்க்கையில் அன்றாடம் பயன்படுத்தும் சாதனங்கள் எல்லாம் கடவுளால், பக்தியால், கோயில் குளங்களுக்குச் செல்வதால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. மனிதனின் அறிவினால் சிந்தனையினால் கண்டுபிடிக்கப் பட்டவை. நம் நாட்டு மக்கள் இவைகளையெல்லாம் அனுபவிக்கிறார்களேயொழிய இதில் எதையும் நம் நாட்டு மக்கள் கண்டுபிடிக்கவில்லை. நம் மக்கள் கண்டுபிடிக்கவில்லை. நம் மக்கள் கண்டுபிடித்ததெல்லாம் அந்தக் கோயிலுக்குப் போனால் அந்தப் பாவம் போகும். இந்தக் குளத்தில், ஆற்றில் குளித்தால் மோட்சத்திற்குப் போகலாம் என்பது போன்ற முட்டாள்தனங்களேயாகும் என்ற தன் வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

போர்க்கருவிகளில் புதுமை

சிவனும், சுப்பிரமணியனும் பேசியமொழி தமிழ் என்பார்கள். சிவபெருமானே உண்டாக்கிய மொழி தமிழ் என்பார்கள். அதே சிவனும், சுப்பிரமணியனும் பயன்படுத்திய போர்க்கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? நாம் அவைகளை இன்று பயன்படுத்துவோமா? அல்லது அவர்களே இன்று போரிட நேர்ந்தால் அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள் என நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

போர்க்கருவிகள் மாற்றம் அடைந்திருப்பதுபோல் நமது மொழியும் மாற்றம் அடைய வேண்டாமா? என்பதுதான் தந்தை பெரியாரின் அடிப்படைக்கேள்வி. போர்க்கருவிகளின் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள் மொழி மாற்றத்தை மட்டுமா அனுமதிக்கமாட்டார்கள்? எனக் கேள்வி கேட்கிறார்.

நாம் பிடிவாதமாகப் பண்டைக் காலத்திய - பாட்டி காலத்திய பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால் கழிபட்டுப்போவோம்; பின் தங்கிப் போவோம். எனவே சேர வாரும் ஜெகத்தீரே என அறிவியல் வளர்ச்சியை நோக்கி அழைத்தவர் பெரியார்ர்.

எதிர்காலவியலுக்கு விடைகூறும் பெரியாரியல்

அரைநூற்றாண்டுக்குத் தேவையான ஒரு நாட்டுக்குரிய அறிவியல், பொருளியல் சமூகவியல் வளர்ச்சியை நிகழ்காலத்திலேயே திட்டமிட்டு அவற்றை அடைய முன்னேறுவதை எதிர்காலவியல் (Futurology) என்கிறோம். அறிஞர் எச்.ஜி.வெல்ஸ் 1932-இல் எதிர்காலவியல் பற்றிக் கோடிட்டுக் காட்டினார். அதற்குப் பிறகு எதிர்காலவியல் என்ற சொல்லாட்சியை முழுமையாக எடுத்து மொழிந்தவர் ஓசிப்.கே.ப்ளச்தியம் எனும் ஜெர்மன் நாட்டுப் பேராசிரியர் ஆவார். இதனை மேலும் செழுமைப்படுத்தியவர் பேட்ரிக் டிக்ஸன் என்பவர்.

இனி, பெரியாரியல் அனைத்தும் எதிர்காலவியலுக்குப் பதில் கூறும் வண்ணமும், அதற்கு அப்பாற்பட்டும் நிலைக்கும் வண்ணமும் விளங்குகிறது என்பது வெள்ளிடைமலை. இன்றைக்கு ஆணும் பெண்ணும் செல்பேசிகளைக் Cellphones) கழுத்தில் கட்டிக் கொண்டு நடப்பதைப் பார்க்கும் போது பெரியாரியலில் எதிர்காலவியல், அறிவியலின் காரணமாகவும் அவசியத்தின் காரணமாகவும் வெற்றி பெற்றிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் தி. இராசகோபாலன்.

பெரிய விவசாயிகளை விடச் சிறு, குறு விவசாயிகளைப் பற்றி அதிகம் கவலைப்பட்டவர் தந்தை பெரியார். பயிரிடுவோர்களைக் கடன் தொல்லையிலிருந்து விடுவிக்கவும், அவர்கள் மீண்டும் கடன்காரர்களாகத் தொல்லைப்படாமல் இருக்கவும் வேண்டிய காரியங்களைக் கைப்பற்ற முடியாமல் செய்வது முதலிய வழிகளைக் கொண்டு சட்டத்தின் மூலமும் வேறுமுறைகளின் வாயிலாகவும் கூடுமானவற்றை யெல்லாம் செய்ய வேண்டும். அநியாய வட்டிக்கார லேவா தேவிக்காரர்களால் பயிரிடுவோர் அழிந்து போகாமல் காக்க வேண்டும் என்ற மனித நேயச் சிந்தனையை 1930களிலேயே வெளிப்படுத்தியவர் தான் தந்தை பெரியார்.

சோதிடத்தை எதிர்த்துப் போர்

அறிவியலுக்கு நேர் எதிரி சோதிடம். சோதிடப் புரட்டு என்று குறிப்பிட்டுள்ளார் தந்தை பெரியார். நாத்திகர்கள், பகுத்தறிவாளர்கள், முற்போக்காளர்கள் கூடச் சோதிடப் புரட்டுக்கு அடிமையாகும் கொடுமையைக் கண்கூடாகக் கண்டு வேதனை கொள்ள நேர்கிறது. எனவே, பகுத்தறிவாளர்களின் பகுத்தறிவையும் ஐயம் கொள்ள நேரிடுகிறது. உங்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது. உங்கள் கையைக் காட்டுங்கள் என்று ஒருவர் கூறிவிட்டால் வாயெல்லாம் பற்களாகக் கையை நீட்டும் மாந்தர்களைப் பற்றி என்ன சொல்ல?

எந்த நம்பிக்கையில் அவர்கள் தங்கள் கையை விரித்துக் காட்டுகிறார்கள்? எந்தவித முயற்சியுமில்லாமல் பட்டங்களும் பதவிகளும் சில நாட்களில் தம்மை வந்து அடையப்போகின்றன. அவற்றிற்கான முன்னறிவிப்பைச் சொல்லத்தான் இவர் வந்திருக்கிறார் என்று அவரிடம் இவர் கையைக் காட்டுகிறார். என்ன மடத்தனம்! எவ்விதக் கடின உழைப்பும், தியாகமும், முயற்சியும் இல்லாமல் மனப்பால் குடிக்கும் இவர்களைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா?

அறிவைக் கெடுப்பாரை
மானம் தடுப் பாரை
மண்ணோடு பெயர்த்தெடுத்த
கடப்பாரை

எனக் கவிஞன் காசி ஆனந்தன் பெரியாரைப் பற்றிக் குறிப்பிட்டானே, அந்த மனிதக் கடப்பாரை இந்த சோதிடப் புரட்டுகளை வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெடுத்த பான்மையை ஈண்டு நோக்குவது மிகையன்று.

மனிதன் பிறக்கும் போது உள்ள நேரத்தைக் கொண்டு அந்த மனிதனின் வாழ்வின் பலாபலன்கள் சொல்லப்படுகின்றன. இது போலவே பொருள்கள், தாவரங்கள் முதலியவைகளின் பிறந்த நேரத்தைக் கொண்டு அவற்றிற்கும் பலாபலன்கள் சொல்லலாமன்றோ?

ஒரு கடிகாரம், ஒரு விளக்கு, ஒரு பாத்திரம், ஒரு நாற்காலி முதலியவைகளில் ஏதோ ஒன்றை எடுத்துக் கொள்வோம். அது செய்யத் தொடங்கிய நேரமோ அல்லது செய்து முடித்த நேரமோ, அல்லது வாங்கிய

நேரமோ குறித்துக் கொண்டால் அந்த நேரத்தில் இருந்த கிரகநிலைக்கேற்ப மற்றும் அதனுடைய சலனத்திற்கேற்பப் பலன்கள் குறிப்பிடக் கூடியதாகவே இருக்க வேண்டும்.

ஏனெனில், மனிதனுக்கும், விக்ரகத்திற்கும் வாழ்க்கை எப்படி இருக்கின்றதோ அப்படித்தான் மற்ற ஜீவன், புல், பூண்டு சாதாரணப் பொருட்கள் ஆகியவற்றிற்கும் இருந்து வருகிறது.

ஒரு குதிரை பட்டத்துக் குதிரையாய் இருந்து பெருத்த சுகபோகமும், பெருமையும் அடைகிறது. அதோடு கூடப் பிறந்த மற்றொரு குதிரை ஜட்கா வண்டியில் தினமும் கட்டப்பட்டு முதுகுப்பட்டை வாங்கப்படுகிறது. அடிவாங்கித் துன்புறுகிறது. இது இக்குதிரையின் கிரகாச்சாரப் பலன் என்று தானே சொல்லவேண்டும்? எனக் கேட்டார் தந்தை பெரியார்.

இதுபோலவே ஒரே பாறையில் உடைத்த இரண்டு பாளக் கற்களில் ஒன்று விக்ரகமாகி பொன், வைர ஆபரணங்கள் அணிந்து தினம் ஆறுகாலப் பூசை, சதிர், பாட்டு, வைபவம் இரண்டு மூன்று மனைவிமார்கள், ஆசைநாயகிகள், ஆண்டுதோறும் திருமணம், பெரிய கோயில் திருவிழா போன்ற வைபவங்களைப் பெறுகிறது. அதோடு பிறந்த மற்றொரு கல் நகராட்சிக் கழிவறைக்குப் பயன்படுத்தப் பட்டு எவ்வளவு அழுக்குப் பட முடியுமோ, எவ்வளவு அவமானப் படமுடியுமோ அவ்வளவையும் படுகிறது.

இதுபோலவே, யாவரும் வெறுக்கும் மனிதக் கழிவு முதற்கொண்டு ஒவ்வொரு பொருளுக்கும் அதனதன் பிறந்த நேரத்தின் பயனாய் பலாபலன் இருந்து வந்தால்தான் சாதகம் என்பதாக ஒன்று இருக்க முடியுமே தவிர, மனிதனுக்கு மாத்திரம்தான் சாதகம் சொல்ல முடியும் என்றால் அதை யார் ஒப்புக் கொள்வார்கள் என வினா தொடுத்தார் தந்தை பெரியார்.

இதுபோலவே குதிரைக்கும், யானைக்கும், நாய்க்கும் சாதகப் பலன் சொல்வதாய் இருந்தால் கோழிக்கும், குருவிக்கும், பாம்புக்கும், தேளுக்கும், ஓணானுக்கும், பல்லிக்கும், ஈக்கும், எறும்புக்கும், பூச்சிக்கும், புழுவுக்கும், கிருமிக்கும், பன்றிக்கும் சாதகப் பலன் சொல்லமுடியாது என்று யாராவது சொல்ல முடியுமா? எனக் கேட்டார். புரட்டுக் கார சோதிடம் வழியிலேயே சென்று அதை மறுக்கும் பான்மையைப் பெரியாரிடமிருந்து அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு நாளைக்கு 16 முகூர்த்தங்கள், ஒரு முகூர்த்தத்திற்கு 3 3/4 நாழிகைகள், ஒவ்வொரு லக்கினத்திற்கும் 4 1/4 முதல் 5 1/2 நாழிகையும், ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் சுமார் 60 நாழிகையும் உண்டு.

இதற்குள் பிறக்கும் குழந்தைகள் எல்லாவற்றிற்கும் கிரகம், நட்சத்திரம் என்பவை ஒன்றாகத்தான் இருக்க முடியும். உலகில் ஏற்படும் பிறப்பு, இறப்புகளுக்கெல்லாம் இந்த லக்கினத்துக்குள்ளும், நட்சத்திரங்களுக்குள்ளும் தான் வந்தாக வேண்டும்.

அவ்வாறே வந்து, அதைக் கொண்டே பலன் சொல்லக்கூடும் என்றே வைத்துக் கொண்டாலும் மனிதனுடைய நித்திய வாழ்க்கை அனுபவத்திற்கும், பிறந்தபோது, கிரகங்கள் வந்த நிலைக்கும் எப்படித் தொடர்பு இருந்து வரமுடியும்? எப்படி இருக்கக் கூடும் என்பதை எந்த வானநூல் நிபுணராவது, நட்சத்திர நிபுணராவது, ஜீவதத்துவ நிபுணராவது உடற்கூற்று நிபுணராவது பொது அறிவியல் நிபுணராவது ஒப்புக் கொள்கிறாரா? என்பது தந்தை பெரியாரின் அறிவார்ந்த வினா.

இவைகளுக்கெல்லாம் அறிவியல் நூல் இடம் தருகிறதா? அறிவியலுக்கு அதாவது பஞ்சேந்திரியங்களால் அறியக் கூடிய தன்மைக்கு விரோதமாய் ஒரு செயலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்படுமானால் பிறகு உலகில் விஷயங்களை எப்படித்தான் உறுதிப்பட நிறுவமுடியும் எனக் கேட்டார் பெரியார்.

ஆகவே, மனிதன் செய்யும் காரியங்கள் எல்லாம் சாதகப் பலன்படியும், சாதகப் பலன்கள் எல்லாம் விதிப்படியும், விதி எல்லாம் முன்ஜென்ம கர்மத்தின் பலன்களுக்கேற்ற படியும் நடப்பதாய் இருக்கையில் பாவபுண்ணியம் என்ற பாகுபாடும் நற்செய்கை, துர்ச்செய்கை என்கிற பெயரும் எப்படிப் பொருந்தும்? மோட்சத்திற்கும், நரகத்திற்கும் அவசியம்தான் ஏது? அவை எதற்காக இருத்தல் வேண்டும்?

மேலும், கடவுளாகத்தானாகட்டும், இந்தச் செய்கைகளுக்குத் தீர்ப்புகளோ, விசாரணையோ, சன்மானமோ, தண்டனையோ - எப்படிச் செய்ய முடியும் என்பவைகளை யோசித்தால் சோதிடம் என்பதாக ஒன்று இருக்க முடியுமா? அது பிறந்த நேரத்தைக் கொண்டு மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பயனும் சொல்ல முடியுமா? என்பன தந்தை பெரியாரின் வினாக்கணைகள்.

விஞ்ஞானிகளும் தத்துவஞானிகளும்

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளால் இன்று மக்கள் சமுதாயம் உடல் துன்பமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறது. தத்துவஞானிகளின் உபதேசங்களால் மக்கள் உள்ளத் துன்பங்கள் நீங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? மேலே காணும் கேள்விக்கு ஆம் என்று யாரும் மறுமொழி கூறிவிடமுடியாது. தத்துவஞான்னிகள் தொடர்ந்து ஒவ்வொருவராய் அவர்களின் தத்துவங்களைச் சமயத் தலைவர்களைப் போல் சொல்லிக் கொண்டே போனார்கள், மனிதர்களும் அவற்றை ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டுக் கொண்டு தங்கள் எண்ணப்படியே செயல்களைச் செய்து கொண்டே போனார்கள், போகிறார்கள் இதுதான் உண்மை.

இந்தியாவில் தமிழ்நாட்டில் பொதுவுடைமை இயக்கத்தைத் தோற்றுவித்த முன்னோடி மா.சிங்காரவேலர். தமிழ்நாட்டில் மூடநம்பிக்கைகளை, போலி அறிவியல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் தந்தை பெரியாரோடு இணைந்து இரட்டைக் குழல் துப்பாக்கியாகப் பணியாற்றியவர். பெரியாரின் *குடிஅரசு* இதழில் எழுதி வந்தவர். அவர் *விஞ்ஞானமுறையும் மூடநம்பிக்கையும்* என்ற நூலில் விஞ்ஞானமுறையும் தத்துவஞான மூடநம்பிக்கைகளும் என்ற ஓர் அத்தியாயத்தை எழுதியுள்ளார்.

ஒரு நாணயத்தின் இருபக்கங்களே சமயமும், தத்துவமும் என்ற அழகான விளக்கத்தோடு இவையிரண்டையும் உதறிவிட்டு விஞ்ஞானத்தைப் பலப்படுத்த வேண்டும் என வற்புறுத்துகிறார்.

19, 20 ஆம் நூற்றாண்டுத் தத்துவ ஞானிகளாம் லாக் (Lock), யூம் (Hume), டெகார்ட் (Deccorate), ஸ்பைனோசா (Spinoza), காண்ட் (Kant), ஏகல் (Hegel), ஷோபன்யேர் (Sehopenheur), ஸ்பென்சர் (Spencer), பெர்க்லே (Berkley), பிராட்லா (Bradlay), கிரீன் (Green), முதலானோர் இன்றியமையாதவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வாத தத்துவங்களை ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, வேறுபயன் ஏதும் விளையவில்லை. பண்டைக்காலம் முதல் நாளிது வரை தத்துவஞானிகளுக்குக் குறைவில்லை.

ஆனால் உலகம் எந்த நன்மையையும் இதனால் அடைந்ததாகச் சொல்ல முடியவில்லை. எவ்வாறு சமயவாதிகள் கடவுள் ஒருவரை மனத்தினால் சிருஷ்டி செய்து கொண்டு பல வேறு பட்ட உலகைச் சிருஷ்டி

செய்தாரென்று கதையைக் கட்டிக் கொண்டது போல், தத்துவ ஞானிகளும் பிரபஞ்சத்திற்கு ஆதாரம் ஒரு வஸ்து இருக்க வேண்டும் என மனதிலே ஒரு கற்பனையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நியாயப்படி உண்மையில் சமயவாதிகளின் கடவுளும், தத்துவஞானிகளின் வஸ்துவும் ஒன்றே. இவ்விரண்டு சொற்களும் மனோபாவனைகளே தவிர, பார்க்கக் கூடிய அல்லது சோதிக்கக் கூடியதல்ல. கடவுளும், வஸ்துவும் வாதத்தில் ஏற்படும் சொற்களேயொழிய, பார்க்கக் கூடிய - பட்டறிவில் வரும் பொருள் அல்ல. இதனால்தான் சமயவாதிகளும், தத்துவஞானிகளும் மனம் போகும் போக்குக்குச் சென்று சாதிக்க உடன் படுகிறார்கள்.

பொதுமக்கள் சமயங்கள் கூறும் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்துள்ளார்கள். கல்வி கற்றோர் தத்துவ ஞானப்பித்துக்களில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இவற்றைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் இவர்களுக்கில்லை. சொல்லின் மேல் சொற்களை ஏற்றிச் சொற்களையே பொருளாகக் கொண்டு இருப்பவர்கள் தத்துவஞானத்தால் எந்த ஒரு பயனும் இல்லை என்று உறுதியாகக் கூற இயலும். சமயங்களைப் போல் மூட வைராக்கியத்தை வளர்க்காவிடினும், அறிவைச் சொல்லால் மயக்கும் வலிமை தத்துவ ஞானங்களுக்கு உண்டு.

உலகம் இந்தக் கற்பனைகளால் எவ்வளவு வீணாகப் போகிறது? எப்போது இவற்றிலிருந்து விடுதலை? என்பதை எண்ண எண்ணக் கவலை மேலிடுகிறது என்கிறார் சிங்காரவேலர்.

சமயம் மக்களுக்கு அபின் (Religion is the opium of the people) என்றார்கள் ரஷ்யர்கள். தத்துவம் கற்றவர்களுக்கு அபின் (Philosophy is the opium of the learned) எனலாம் நாம். இவையிரண்டும் இல்லாமலிருந்தால் விஞ்ஞானம் எளிதாக வேரூன்றும்.

சமயம் பீடித்ததால் தடுமாறும் விஞ்ஞானிகள்

கடவுள் என்று ஒருவர் இருப்பாராயின் இடம் எங்கே என்பதை முதற்கேள்வியாகக் கொண்டு கேட்டால் அதற்கு விடை விஞ்ஞான ஆராய்ச்சியில் கிடைக்காது. ஆனால் சமயவாதிகள் தாயுமானவர் பாடலில் உள்ள *அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்* என்ற பகுதியை மீண்டும்

மீண்டும் எடுத்துரைத்தனர், கடவுளை அங்கும் இங்கும் இருப்பதாகக் காட்ட இயலாது. இன்னொருவர் கடவுள் எங்கும் நிறைந்துள்ளார் என்று கூறியது மேலும் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. எந்தப் பொருளையாவது தெரிந்து கொள்ள வேண்டுமானால் அப்பொருள் அங்கேயாவது, இங்கேயாவது இருப்பதாகச் சொன்னால் அதை அறிந்து கொள்ள முடியும். அங்கும், இங்கும் இல்லாத பொருள் எங்கும் இருப்பதென்றால் மனிதனுக்கு விளங்கக் கூடியதாகத் தோன்றவில்லை.

விஞ்ஞானத்திற்குத் தெரிந்தவரை பிரபஞ்சம் முழுமையும் தூசும் (Cosmic dust) கிரணமும் (Cosmic Rays) நிறைந்துள்ளதாகவும் தோன்றுகிறது. இவைகளின் சையோகத்தால் பிரபஞ்சப் பொருள்களாகிய மனிதர்களும் மற்ற சில அசீவப் பொருள்களும் உண்டாயிருக்க வேண்டும் என்பதுதான் மனிதனின் பட்டறிவு யுத்தியாகும். இவைகளுக்கு மேல் அல்லது உள்ளும் புறமுமாக நிறைந்திருப்பது கடவுள் என்பது ஊமை கண்ட கனவென்றே மதிக்க வேண்டும்.

சமயப்பற்றுள்ள பத்திரிகைக்காரர்களும் சில சொற்பொழிவாளர்களும் கடவுள் உண்டென்பதற்கு விஞ்ஞானத்தில் ஆதாரம் உண்டு என்று வாதிடுகின்றனர். இந்த வாதம் பழைமையானதே. சில விஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுடைய நூல்களில் சிலவற்றிலிருந்து கடவுள் இருப்புக்கு ஆதாரமாகச் சில மேற்கோள்களைக் காட்டுகிறார்கள்; இதுவும் புதிதன்று. அந்தக் காலகட்டங்களில் சில விஞ்ஞானிகள் தோன்றி விஞ்ஞானத்திற்கு அதிகமான விஷயங்களைக் குறித்துத் தங்கள் கருத்துகளையும், நம்பிக்கையையும் தெரிவித்தால், அவர்கள் சமயத்தை ஆதரிக்கிறார்கள் என்று முழங்குவது – கடவுளை ஒப்புக் கொள்கிறார்கள் என்பது அன்றும், இன்றும் வாடிக்கை. இதில் உண்மை இல்லை என்று எளிதாக அறியலாம்.

ஓர் எடுத்துக் காட்டுக் கூறவேண்டுமானால் – சர். ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற வானநூல் ஆசிரியர் எழுதிய மர்மமான பிரபஞ்சம் (Mysterious Universe) என்ற நூலை, ஏன், கடவுளும் பிரபஞ்சமும் என்ற நூலுக்கு ஆதாரமாகக் கொள்ளவில்லை எனச் சிங்காரவேலரைப் பார்த்துக் கேட்ட போதும், எட்டிங்டன் என்ற ஆசிரியர் கருத்துக்களை ஏன் எடுத்தாளவில்லை என்று கேட்டபோதும் அவற்றில் பொருள் இல்லை.

விஞ்ஞானிகள் கடவுள் உண்மை என்று ஒப்புக்கொண்டமைக்கு எவ்வித அகப்புற ஆதாரங்கள் இல்லை. விஞ்ஞானத்தில் சறுக்கியதாகக் காணப்படவில்லை. மதங்களின் சறுக்கைச் சகித்துக் கொள்ள முடியுமே தவிர, விஞ்ஞானத்தில் எவ்விதச் சறுக்கிற்கும் இடம் இல்லை. சறுக்கும் விஞ்ஞானமும் எங்கும் இல்லை.

விஞ்ஞானம் தனக்கு தெரிந்தவரைத் தெரியும் என்று உறுதியாகக் கூறும். தெரியாதவரைத் தீர்க்கமாகத் தனக்கு தெரியாதென்றே கூறும், தெரியாதவரைத் தீர்க்கமாகத் தனக்கு தெரியாதென்றே சாதிக்கும். இதுவே விஞ்ஞானத்துக்குரிய மதிப்பும் மரியாதையுமாகும். இந்த விஞ்ஞானத்திற்கீடாக எவ்வித ஞானமும் இல்லை என்றே கூறலாம் என்றார். ஆக அறிவியல் என்பது உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்களை விசாரித்து அறியும் ஞானமாகும். இவற்றை ஆராயும் எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் இதே உண்மை வெளிவரக் காணலாம். உயிரியல் நூல்களின் உட்பிரிவு நூல்களாகிய விலங்கியல், நிலவியல், வரலாற்று உடற்கூற்றியல், சமூகவியல் போன்றவற்றில் எதிலும் கடவுள் இருப்பு (Existence of God) குறிப்பிடப்படவில்லை. உயிரற்ற பொருள்களைப் பற்றிப் பேசும் அதன் பெயர் இறையியல் (Theology). இதில் கூறப்படுபவை பார்த்தலுக்கும் சோதனைக்கும் உட்பட முடியாது. எனவே இவையும் அறிவியலாகாது. 'மன' நூல் (Psychology) ஒன்று உண்டு. இதில் கடவுளுக்கு எந்த ஆதரவும் இல்லை.

கடவுள் இருப்பைப் பற்றி எந்த நூல்தான் கூறுகிறது என்று பார்த்தால் 'Metaphysics' என்பது அது. புலன்களுக்குப் புலப்படாததும் சோதனைக்கும் உட்படாததும் வெறும் மனோ கற்பிதமானதும் ஆன கடவுள் என்ற சொல்லை வேதாந்தத்தில் காணலாம். ஆனால் மேற்கூறப்பட்ட Metaphysics விஞ்ஞானம் (Science) ஆகாது. ஆதலால் விஞ்ஞானத்தில் கடவுளுக்கு எவ்வித இடமும் கிடையாது என்ற தந்தை பெரியாரின் கருத்து இங்கு நிலைபேறு அடைகிறது. மேலும் விஞ்ஞானிகள் எல்லாம் நாத்திகராகவே இருந்திருக்கக் காண்கிறோம்.

மனித குலத்தின் தொண்டரும் மாமனிதருமான தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார பல்பை 1878-இல் கண்டுபிடித்து உலகிற்கே விளக்கேற்றியவர். திரைப்படத்தையும் பேசாப் படத்தையும் பின் பேசும் படத்தையும் கண்டுபிடித்தவர். ஆயிரம் பொருள்களுக்கு மேல் கண்டுபிடித்துக்

காப்புரிமை பெற்ற எடிசனின் வாழ்க்கை நெடுகிலும் எண்பத்து நான்கு வயது வரை கடவுள் பற்றிய பேச்சே இல்லை.

ஆகாய விமானம் கண்டறிந்த ரைட்சகோதரர்கள், ரேடியம் கண்டதற்கும் கதிர் இயக்கம் கண்டதற்கும் இருமுறை நோபல் பரிசு பெற்ற மேரிகியூரி அம்மையார், புவிஈர்ப்பு சக்தி உண்டு எனக் கண்டறிந்த ஐசக் நியூட்டன், தொலைபேசியைக் கண்டுபிடித்துக் காப்புரிமை (Patent) கண்ட அலெக்ஸாண்டர் கிரகாம் பெல், ஆழிசூழ் நிலம்தான் சூரியனைச் சுற்றுகிறது. அசையாமல் இருப்பது சூரியனே என்பதை நிருபித்த கலிலியோ, கம்பியில்லாத் தந்தி - வானொலி ஆகியவற்றிற்காக நோபல் பரிசு வென்ற மார்க்கோனி, டைனமோவைக் கண்டுபிடித்த மைக்கேல் பாரடே, ஆர்க்கிமிடிஸ் போன்ற அறிவியலாளர்களும் அத்தகையாளரே.

தண்ணீரில் ஒரு பொருள் மூழ்கும் போது, அது வெளியேற்றும் பொருள் அதன் எடைக்குச் சமமாக இருக்கும். ஆர்க்கிமிடிஸ் இந்த உண்மையைக் கண்டுபிடித்த போது அவர் தண்ணீர்த் தொட்டிக்குள் துணியின்றி இருந்ததையும் மறந்து கண்டுபிடித்துவிட்டேன், கண்டுபிடித்துவிட்டேன் (யுரேகா, யுரேகா) என்று கத்திக் கொண்டே ஓடினார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய அறிஞர் தன் நாட்டிற்கு என்று ஒரு கெட்ட பொருளையும் கண்டுபிடித்தார்; அது ஒரு கண்ணாடி. கிரேக்கர் மீது ரோமானியர் படையெடுத்து வந்தபோது, கிரேக்க வீரர்கள் இவர் கண்டுபிடித்த கண்ணாடிகளைப் பெரிய அளவில் தயாரித்து ரசம் பூசி ரோமானிய வீரர்கள் குதிரைகளில் வேகமாக வரும் போது இந்தக் கண்ணாடிகள் மூலம் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கச் செய்தனர். கண் கூசியதால் ரோமானிய வீரர்கள் குதிரைகளிலிருந்து கீழே விழுந்து உருண்டனர்.

ரோமானியப் படைவீரர்களின் மரணத்திற்குக் காரணமான ஆர்க்கிமிடிஸ், கணக்கு ஒன்றைப் போட்டுக் கொண்டிருக்கும் போது வெறி கொண்ட ரோமானிய வீரன் தன்னைக் கொலை செய்ய வந்ததை அறிந்து அவனிடம், ''என்னைக் கொலை செய்! ஆனால் இந்தக் கணக்குகளை மட்டும் அழித்துவிடாதே'' என்று மரணத்துக்கு அஞ்சா அந்த மாவீரன் கூற, ரோமானிய வீரன் ஆர்க் மிடிசை வாளால் வெட்டிச் சாய்த்தான். நன்றாற்றலுள்ளும் தவறு இருக்கும் போது உயிர்க் கொலைக்காக ஒரு கருவியைக் கண்டுபிடித்த அவர் கொலைக்கே இரையானது ஒரு கொடுமைதான். 'மின்னல் என்பது மின்சக்திதான்' என்பதையும் மின்னலின் இணையான இடியைத் தாங்கும் கருவியையும் கண்டுபிடித்த பெஞ்சமின்

பிராங்கிளின், அணுக்குண்டு தயாரிப்பதற்கு அடிப்படை அமைத்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், பிரான்ஸ் நாட்டின் தலை சிறந்த மனிதராக மாவீரன் நெப்போலியனை விட்டுவிட்டுத் தன்னை அந்நாட்டு மக்கள் தேர்ந்தெடுக்கும் பேறு பெற்ற லூயி பாஸ்டியர் "இதற்குக் காரணம், மனித குலம் முழுமைக்கும் உதவக்கூடிய விஞ்ஞானப் பொருளைக் கண்டு பிடித்தமை தான் – நாய் கடித்த மனிதனுக்குத் தொப்புளைச் சுற்றி ஊசி போடும் முறையைக் கண்டுபிடித்த மைதான்" ஆகிய இத்தனை அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கையை ஆராய்ந்த போதும் யாரும் கடவுள், மதச் சச்சரவுகளில் ஈடுபட்டதாகக் குறிப்புகள் இல்லை என்பது எவ்வளவு மகிழ்வை ஏற்படுத்துகிறது.!

சமயம், கடவுள் குழப்பத்தை ஏற்படுத்திய ஓர் ஆயிரம் மனிதர்களை உள்ளடக்கிய உலகின் பல கோடி மக்களின் உடல் நல வாழ்க்கைக்கே தங்கள் கண்டுபிடிப்புகளை அர்ப்பணித்த அறிவியலாளர்களை, கடவுள் மதச் சேற்றில் சிக்க வைக்கலாமா?

போலி அறிவியல்

அறிவியல் எனும் விஞ்ஞானத்திலும் போலி உண்டு. அதன் பெயர் போலி விஞ்ஞானம் (Pseudo Science). அறிவியல் என்பது திறந்த மனத்தோடு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, மிகப் பெரிய அளவுக்குத் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு இருப்பதுதான் என்பார் விடுதலை ஆசிரியர் டாக்டர் கி.வீரமணி. அத்துடன் காரணகாரியங்கள் இருக்க வேண்டும். காரணகாரியங்கள் இல்லாமல் எதுவுமே இருக்க முடியாது. அந்தக் காரண காரியத்தை ஏற்பதுதான் அறிவியல்.

போலி அறிவியல் என்பது வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் பழக்க வழக்கங்களால், ஆசைகளால், ஆசாபாசத்தினால், பலவீனமாக இருப்பதால் உருவாவது. இந்தப் போலி அறிவியல் பார்ப்பதற்கு கேட்பதற்கு அறிவியல் போன்றிருக்கும், அவ்வளவே!

ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமையை இந்திய அரசியல் சட்டத்தின் 51-ஏ எனும் பிரிவில் H என்ற உட்பிரிவு சொல்வதாவது:

அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாக இருக்க வேண்டும். எதற்கு? ஏன்? எனக் கேட்க வேண்டும். அதன்வழிச் சமூகமாற்றம் வரவேண்டும், என்பதே அச்சட்டப்

பிரிவின் குறிக்கோள் (To Develop the Scientific temper, humanism and the spirit of inquiry and reform)

ஆனால், அரசியல் சட்டத்திற்கே எதிராக இருக்கும் வேதகாலச் சோதிடத்தைக் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடமாக நடத்தலாம் (நடத்த வேண்டும் என்ற பெருவிருப்பத்தோடு) 2001-இல் ஒரு சுற்றறிக்கை கல்வி நிறுவனங்களுக்கு வந்திருக்கிறது. அந்தக் கூற்று அறிவியலுக்கு அணுவளவும் தொடர்பில்லை என்பதால் அது வந்த வேகத்தில் மறைந்து விட்டது என்பது செய்தி.

இவற்றில் வானியல் (Astronomy) என்பது அறிவியல். சோதிடம் (Astrology) என்பது போலி அறிவியல். எனவே வானியல் சோதிடத்தினின்றும் வேறுபட்டது. (Astronomy is different from Astrology). ஸ்காட் (Scott) எனும் அறிஞர் மேலே கூறப்பட்ட போலி விஞ்ஞானங்கள் /எவ்வாறு உருவாக்கப்பட்டுப் பரப்பப்பட்டு வருகின்றன என்பதைப் பற்றி ஆங்கிலத்தில் ஐந்து நூல்கள் எழுதியுள்ளார். அவற்றை எடுத்துரைத்தாலே இவற்றில் மயங்கும் மக்களைக் காப்பாற்றி விடமுடியும்.

பெரியார் - மனிதர், கவிஞர், விஞ்ஞானி

போலி அறிவியலைத் தந்தை பெரியாரின் துணையோடு, துணிவோடு மா.சிங்காரவேலர் தோலுரித்துக் காட்டியவற்றைக் காண்போம். அனைத்திற்கும் அடிப்படையான பெரியாரியலைத் தந்த தந்தை பெரியார் எவ்வாறு மனிதனை, ஒரு பொருளை நோக்குவார் என அறிவது மிகவும் தேவையான ஒன்று. அப்போதுதான் அவர் உரைவீச்சில் இடம் பெறும் 'கரடுமுரடுகள்' பற்றி அறிந்து தெளிய முடியம். முன்பே குறிப்பிட்டது போல் ஒன்றை மனிதனாகவும், கவிஞனாகவும், விஞ்ஞானியாகவும் அவர் பார்க்கும் பார்வை நமக்குப் புலனாகும். மற்றவர்களைப் போல் நுனிப்புல் மேயும் தன்மை அவரிடம் இல்லை. இல்லாவிட்டால் சுயசிந்தனையாளராக உருவாகியிருக்க முடியுமா?

> "நான் மற்றவர்களைவிட விஷயங்களை முதலில்
> நன்கு உணர்ந்து, அதன் பிறகு எடுத்துச் சொல்பவன்.
> எந்த விஷயத்தையும் நிர்வாணமாகப் பார்த்துத்தான்
> பின் விளக்குவேன்; இப்படி நிர்வாணமாக
> உணர்ந்து விளக்குவது நாகரிகக் குறைவு
> என்று சிலர் எண்ணுவார்கள்."

என்று தன்னிலை விளக்கமாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதை ஈண்டு நோக்க வேண்டும்.

ஒருமனிதனை வர்ணிப்பது என்றால் அவனது உடை, நாமம், பட்டை, உருமாலை - தலைப்பாகை (Upper Cloth) இவைகளை வர்ணித்தால் போதாது. அவனுடைய உடலமைப்பு, உடல் அங்க அவயவங்கள் ஆகியவை பற்றியும் உணர்ந்து வர்ணிக்க வேண்டும். அப்போதுதான் வருணனை முழுமையானது என்று கூறமுடியும். இதற்கு மற்றொரு எடுத்துக்காட்டையும் கூறியுள்ளார்.

ஒரு நாடகத்தில் வருகின்ற நடிகையைப் பார்த்து அவளுடைய முகத்தில் பூசிய சாயம், அணிந்துள்ள கில்டு - கண்ணாடி நகைகள், சடை இவைகளைப் பார்த்து அழகாக இருக்கிறாள் என்று கூறிவிடமுடியுமா? அந்தச் சாயத்தைக் கலைத்து கில்டு நகை, கூந்தலில் ஒட்டவைத்துள்ள ஒட்டு முடி முதலியவைகளை எடுத்து விட்டுப் பார்த்தால்தான் அவள் அழகியா இல்லையா என்பது விளங்கும்.

இந்த முறை எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் பிடிக்கும் என்று அவர் கருதுவதில்லை. இருந்தாலும் உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டுமே! இந்த வேலையைச் செய்ய வேறு ஆளே இல்லாததால் தான் செய்வதாகத் தந்தை பெரியார் குறிப்பிட்டு இருப்பது சிந்தனைக் குரியது.

நோய் வந்த ஒருவனுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதென்றால் ஒரு அறுவை மருத்துவர் அந்நோயாளியின் உடைகளையெல்லாம் களைந்து விட்டுத்தானே அறுவைச் சிகிச்சையைத் தொடங்குகிறார்? அதே போலத்தான் தந்தை பெரியார் அவர்களும் இந்தச் சமுதாயத்திற்கான அறுவை மருத்துவத்தில் ஈடுபட்டார். இல்லையெனில் இந்தச் சமூகமாகிய உடம்பு இந்நேரம் புரையோடிப் போயிருக்காதா? எனவே, தேர்ந்த ஒரு சமுதாய மருத்துவர் அவர் என்பது விளங்குகிறதன்றோ?

அறிவியலுக்குப் புறம்பான ஆயுத பூசையும், சரஸ்வதி பூசையும்

மனித மூளையில் படிந்துள்ள அழுக்குகளை நீக்க வேண்டிய கல்வி, மூளை விலங்கை உடைக்க வேண்டிய கல்வி, அறிவைத் தோண்டி எடுக்க வேண்டிய கல்வி - அழுக்குகள் சேர்ந்தும், மனித மூளைகள் விலங்குகள்

பூட்டப்பட்டும் அவைகளைத் தோண்டத் தோண்ட அறியாமையாகிய அழுக்குகள் வந்து கொண்டிருப்பதைக் கண்டார் தந்தை பெரியார்.

இதற்குக் காரணம் கல்வியைப் பற்றியே திறனாய வேண்டிய நிலைக்கு ஆளானார். அந்த விளைவை நாம் காணவேண்டும்.

சரஸ்வதி பூசை என்ற பொருளற்ற பூசை கல்வியையும், தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி, அதற்குச் சரஸ்வதி என்று பெயர் கொடுத்து, அதைப் பூசை செய்தால் கல்வி வரும், பல்வேறு வித்தைகள் வரும் என்று சொல்லித் தங்களை உயர்சாதியினர் என்று சொல்லிக் கொள்வோர் நம்மை ஏமாற்றி, கல்வி கற்கச் சொந்த முயற்சி இல்லாமல் சாமியையே நம்பிக் கொண்டு இருக்குமாறு செய்து விட்டு, நாம் அந்தச் சாமி – பூசையின் பேரால் கொடுக்கும் பணத்தைக் கொண்டே அவர்கள் படித்துப் பெரிய படிப்பாளியாக மாறி நம்மைப் படிப்பு வராத 'மக்கு'களாக்கிவிட்டனர். சரஸ்வதி எனும் பெண்தெய்வமே விமர்சனத்திற்குரியதாகியுள்ளது. சரஸ்வதி, பிரம்மா என்னும் படைப்புக் கடவுளுக்கு மகளாகவும், பெயர்த்தியாகவும் கற்பிக்கப்பட்டுள்ளாள். அதே சரஸ்வதி ஒரு கட்டத்தில் பிரம்மனுக்கு மனைவியாக ஆன கொடுமையும் காணக்கிடக்கிறது.

இத்தகைய பெருமை கொண்ட சரஸ்வதியைக் கல்விக் கடவுளாக்கி, சரஸ்வதி பூசை என்றும், ஆயுதபூசை என்றும் ஒரு நாளைக் குறித்துக் கொண்டு அந்த நாளை விடுமுறையாக்கி, புத்தகங்களையும், ஆயுதங்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தன் ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்களையும் தராசு, படிக்கல், அளவு மரக்கால், படி, உழக்கு, பெட்டி போன்றவற்றையும், தொழிலாளிகள் தங்கள் தொழிற் கருவிகளான எந்திரங்களையும், மாணவ, மாணவிகள் தங்கள் ரவிக்கை, சேலைகளையும், நகைகளையும், வாத்தியக்காரர்கள், வாத்தியக் கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொருவரும் அவரவர்கள் இலட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான்களையும் வைத்துப் பூசை செய்கிறார்கள்.

இவ்வாறு, அனைவரும் ஆயுதபூசையும், சரஸ்வதி பூசையும் கொண்டாடுகிறார்கள். கொண்டாடினால், கொண்டாடியவர்களுக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டுமல்லவா? அதுதான் இல்லை. நேர்மாறான பலன்களே ஏற்பட்டன. என்னதான் நடந்தது? அந்த நாளில் தொழில் நின்று போனதால் வருமானங்கள் இல்லை. பூசை, ஓய்வு முதலிய ஆடம்பரங்களுக்காகத் தங்கள் கையில்இருக்கும் பணத்தைச் செலவழித்தும்,

போதாதபோது கடன் வாங்கியும் செலவு செய்ய நேரிடுகிறது. இதை விட ஒரு கொடுமை இல்லையல்லவா?

ஆயுதத்தை வைத்துப் பூசை செய்த அரசர்கள், செய்து வருகின்ற அரசர்கள் எல்லாம் தந்தை பெரியார் காலத்தில் நம் நாட்டில் ஆயுதத்தை வைத்துப் பூசை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கி முனையில் மண்டி போட்டுச் சலாம் செய்து கொண்டே இஸ்பேட் ராசாக்களாக இருந்து வந்தார்களே தவிர ஒரு அரசனாவது சரஸ்வதி பூசை, ஆயுத பூசை ஆகிய பூசைகளின் பலனால், பலத்தால் தன் காலில் தானே நிற்கவில்லை.

சரஸ்வதி பூசை நடத்திய ஒரு வணிகனாவது, சரஸ்வதிக்குப் பயந்து பொய்க் கணக்கு எழுதாமல் இருக்கவில்லை. தவறான நிறை நிறுக்காமல் இருந்ததில்லை. குறை அளவு அளக்காமல் இருந்ததில்லை. இவர்களைப் போலவே, கைத்தொழிலாளர்களும் தங்கள் ஆயுதங்களிடத்திலேயே மிகவும் பக்தியாய் அவைகளைக் கழுவி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் பொட்டு வைத்து விழுந்து கும்பிடுவார்கள். ஆனால் இவர்களில் ஒருவராவது நாணயமாக நடந்து கொள்கிறார்கள் என்று கூற முடியாது.

இதுபோலவே புத்தகங்களுக்கும், பென்சில்களுக்கும், கிழிந்த காகிதக் குப்பைகளுக்கும் சந்தனப் பொட்டிட்டுப் பூசை செய்கிறார்களே, அந்தப் புத்தகம், கற்பலகை காலில் பட்டுவிட்டால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்கிறார்களே, கும்பிடுகிறார்களே இவர்களுக்கெல்லாம் நன்றாகப் படிப்பு வந்துள்ளதா என்ற வினாவுக்கு இல்லையென்றே சொல்ல வேண்டிய நிலையில் உள்ளோம். நம்நாட்டின் படித்த மக்கள் 100-க்கு 5 பேருக்குள்ளாகவே (1929-இல்) இருந்து வருகின்றார்கள்.

இவ்வளவு ஆயுத பூசை செய்தும், சரஸ்வதி பூசை புரிந்தும், இவ்வளவு விரதங்கள் இருந்தும்.

நமது அரசர்கள் அடிமையாளாகவே உள்ளனர்
நமது வணிகர்கள் நட்டமடைந்து உள்ளனர்
நமது தொழிலாளர்கள் பிழைக்கத் தொழில்
இல்லாமல் பிறநாட்டிற்குக் குடி போகிறார்கள்
நம் மக்கள் 100க்கு 5 பேரே படித்தவர்களாக உள்ளனர்

சரஸ்வதி சாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்திற்கு 9 பேரே படித்திருக்கிறார்கள். இவற்றின் காரணம் என்ன?

தந்தை பெரியார் தர்க்க முறையில் வாதிடுகிறார். நாம் செய்யும் பூசைகளைக் கல்வித் தெய்வம் சரஸ்வதி அங்கீகரிக்க வில்லையா? அல்லது சரஸ்வதி தெய்வத்திற்கும் இந்த பூசைப் பலன்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லையா? அல்லது சரஸ்வதி என்னும் ஒரு தெய்வமே பொய்க் கற்பனையா? இவ்விதமான மூன்று கேள்விகளில் ஏதேனும் ஒன்று உண்மையாக இருக்க வேண்டும்.

வெள்ளைக்கார நாட்டில் சரஸ்வதி என்ற பேச்சோ, கல்வித் தெய்வம் என்ற எண்ணமோ அணுவளவும் இல்லை. உண்மையிலேயே சரஸ்வதி எனும் ஒரு தெய்வம் இருக்குமானால் தன்னை வணங்குவோர்களைத் தற்குறிகளாக வைத்திருக்குமா என்ற கேள்வி எழத்தானே செய்கிறது.

உண்மையிலேயே கைத்தொழில் ஆயுதம், யுத்த ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவை சரஸ்வதி என்னும் தெய்வ வடிவாய் இருக்குமானால் அதைப் பூசை செய்யும் இந்த நாடு அடிமைப்பட்டும், தொழில் அற்றும், வணிகமற்றும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவும், சரஸ்வதியைக் கனவிலும் கருதாமல் சரஸ்வதி வணக்கம் செய்கிறவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வணிகர்கள் அரசாட்சியுடனும், தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்கவும் முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இந்தப் பூசைகளின் மூலம் நம் அறியாமையும் சேர்த்து வெளிப்படுகிறது என்பது புலனாகும்.

மன்னர்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, இதற்காக மக்கள் பணம் செலவழிப்பது, அறிவைச் செலவு செய்வது, பத்துலட்சக் (அப்போது) கணக்கான ரூபாய்களுக்குப் பொம்மைகள், சந்தனம், குங்குமம், கற்பூரம், சாம்பிராணி, சுண்டல், வடை, மேளவாத்தியம், வாழைமரம், பார்ப்பனர் தட்சணை, சமாராதனை, ஊர்விட்டு ஊர்போகப் புகைவண்டிக்கட்டணம் ஆகிய இவையும் செலவாகின்றன. இவையெல்லாம் யார் வீட்டுப் பணம் என்று வினவுகிறார் தந்தை பெரியார். கேட்டு விட்டு இவையெல்லாம் நாட்டின் பணம் என்று விடையும் தருகிறார்.

ஓராண்டில் இந்தப் பூசைக்காக மட்டும் செலவாகும் நேரமும் ஒரு கோடி ரூபாய் அளவாகும். இத்துடன் மற்ற பண்டிகை, உற்சவம், புண்ணிய தினம், அர்த்தமற்ற சடங்கு என்பவற்றின் மூலம் செலவாகும் தொகை எளிதில் விளங்கிவிடும் என்று கோடிகாட்டிச் சென்றிருக்கிறார். இதை இந்திய நாட்டின்

எந்தப் பொருளாதார வல்லுநர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை என்றும் நொந்து கொள்கிறார்.

மேற்கூறியவைகள் எல்லாம் அறிவியல் சிந்தனைக்கு அணுவளவும் உதவாதவை.

இந்த ஆயுத-சரஸ்வதி பூசைகளோடு தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கே உரிய பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் மகாமகம் பற்றியும் குறிப்பிட்டு அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கச் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

மகாமக உற்சவத்திற்காகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள், மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள், ஆகும் பணச்செலவுகள் படும் துன்பங்கள் எழுத்தில் அடங்காது. எனவே, இந்து என்போர் அறிவுக் கூறு இல்லாதவர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று சொன்னால் உடனே கோபப்படத்தான் முடிகிறது. ஆனால் அறிவு கொண்டு பார்க்கின்றோமோ என்றால் இல்லவே, இல்லை. தந்தை பெரியார் தமிழர் மீதுள்ள அக்கறையால் - அவர்கள் முன்னேற வேண்டுமே அறிவும் மானமும் உடையவராய் மாறவேண்டுமே என்று மகாமகத்தை மையமாகக் கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கும்பகோணத்திற்கும் அங்குள்ள மகாமகக் குளத்திற்கும் உள்ள சிறப்புகள் போலவே உலகத்தில் உள்ள அனேகச் சாக்கடைகளிலும், பட்டிக்காடுகளிலும், குப்பைமேடுகளிலும் உள்ள குழவிக்கற்களுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும் எல்லாம் புராணங்களும், ஐதீகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக எந்தக் காரியங்களுக்கும் சிறப்பு என்பது இரண்டே இரண்டு வாக்கியங்களில் தான் அடங்கி இருக்கின்றன.

1. அனைத்து பாவங்களும் நீங்கிவிடும்.
2. வேண்டியதெல்லாம் அடையலாம்.

என்பனவே அவை.

இந்த இரு செயல்களும் யோக்கியமானவைதானா என்று எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறார். மனிதன் செய்யும் பாவங்கள் எல்லாம் இந்த மாதிரி நேர்த்திக் கடன்களால் தீர்ந்து போவதாக இருந்தால் உலகில் எந்த மனிதனாவது பாவச் செயல்களைச் செய்யத் தவறுவானா? தயங்குவானா என்று சிந்திக்கச் சொன்னார்.

அடுத்து, மனிதனுக்கு வேண்டிய - அவன் ஆசைப்படும்படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறிய செயலால் கைகூடிவிடுவதாய் இருந்தால் மனிதனுடைய முயற்சி, நடத்தை, ஒழுக்கம் என்பவைகளுக்கெல்லாம் அவசியமும், நிபந்தனையும், வரையறையும் எதற்காக வேண்டும் என்று சிந்திக்கச் சொன்னார்.

தீர்த்தம் என்றாலும், நதி என்றாலும், குளம் என்றாலும் என்னவென்பதைச் சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும்.

நதி என்றால் மழைபெய்வதால் ஏற்படும் வெள்ளங்கள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்ப்போக்காகும்.

குளம் என்பது, இம்மாதிரி ஓடையில் இருந்து வழிவைத்துத் தண்ணீர் நிரப்புவதோ அல்லது மழை வெள்ளத்தால் ஊரில் உள்ள அசுத்தங்களையும், மற்ற அழுக்குகளையும் அடித்துக் கொண்டு வந்து தண்ணீர் தேங்கியிருப்பதுவோதான். மற்றும் குட்டித் தீர்த்தங்கள் என்பன கிணற்றுக்கு நீர் ஊற்றம் போன்ற ஊற்றேயாகும். இத்தண்ணீருக்கு எல்லாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதான் உண்டு. மற்றபடி அவற்றில் ஒரு மனிதன் செய்யும் பாவம் என்பதைப் போக்கவோ, அவன் ஆசைப்பட்டதைக் கொடுக்கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக்கூடும் என்பது ஒரு மனிதனுக்குத் தெரியாதா என்பதே தந்தை பெரியாரின் கேள்வியாகும்.

நமது பழக்கவழக்கங்களைப் பற்றியும், சடங்கு சம்பிரதாயங்கள் பற்றியும், தீர்த்தங்கள் பற்றியும் மிஸ் மேயோ (Miss. Mayo) எழுதியதைப் பார்த்து எல்லோரும் கோபப்பட்டார்கள். ஆனால் இதுபோல் சேற்றில் குளிப்பதால் நாம் புரிந்த பாவங்கள் அனைத்தும் எவ்வாறு தீரும்? இது அறிவற்ற பேராசை அன்றோ? பிறகு எந்தவிதத்தில் நாம் அறிவாளிகள், சிறப்பானவர்கள், மனிதத் தன்மையுடையவர்கள் என்று ஆழமாக எண்ணிப் பார்க்கச் சொன்னார் பெரியார்.

புரோகிதர் கொள்கை ஒருபக்கம் இருக்க, கூட்ட நெருக்கடியில் ஏற்படும் உயிர்ச்சேதம், திருட்டு, அம்மை போன்ற நோய்களின் படையெடுப்பு இவையெல்லாம் சேர்ந்து, மொத்தத்தில் மனிதர்களுக்கு எல்லையற்ற துன்பங்களை வாரிவழங்கி வருவதை மகாமக உற்சவங்களில் அனுபவித்து

வருவது ஒருதலை. அறிவியல் பூர்வமாகக் கற்றவர்களும் மக்கள் நலம் நாடுவோரும் மகாமகம் போன்ற விழாக்கள் கொண்டாடுவதைத் தவிர்க்க முயற்சி மேற்கொண்டிருந்தால், இந்த உண்மையான பாவம் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறையேனும் நடவாதிருக்கு மல்லவா? இவைகளுக்கெல்லாம் தமிழர்களுக்குத் தேவை அறிவியல் சிந்தனைகள். இதற்காகத்தான் தன் வாழ்நாளின் பெரும்பகுதியைத் தந்தை பெரியார் செலவிட்டார்.

மனித குலத்திற்குத் தேவையானவை அறிவியல் சிந்தனைகளே

பகுத்தறிவுச் சிந்தனைகள், முற்போக்குச் சிந்தனைகள், அறிவியல் சிந்தனைகள், மனிதநேயம் ஆகிய உயர்குணங்களின் வார்ப்பே தந்தை பெரியார். இருப்பினும் அறிவியல் கருத்துக்களைச் சொல்லும் போது அவரே உற்சாகத்தின் உறைவிடமாகிறார்.

1. உயிரின் தோற்றமும், வளர்ச்சியும் (1929)
2. இனி வரும் உலகம் (1942)
3. புதியதோர் உலகு செய்வோம் (1948)

ஆகிய அறிவியல் கருத்துக்கள் பொதுளிய நூல்களை எழுத்தாகவோ, பேச்சாகவோ படைக்கும்போது அவர் காட்டிய வேகத்திற்குக் காரணம், இந்நாட்டு மக்கள் அறிவியலைப் பின்பற்றி உயர்ந்து துன்பமில்லா வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஒரே தணியாத தாகம் தான். அரசியல் கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு, அன்னி பெசன்ட் அம்மையாரின் பகுத்தறிவுக்கருத்துக்களை ஆராய்ந்தால் *நான் ஏன் கடவுளை நம்பவில்லை* (Why I don't believe in god) என்ற சிறு நூலில் கடவுள் பற்றிய நம்பிக்கையை ஏற்கும் வண்ணம் எந்த அடிப்படையையும் ஏற்க மறுக்கிறது என் உள்ளம் என்று குறிப்பிட்டுள்ளதையும், காரண காரியங்களை அறிய முயன்று தோற்றுவிட்ட தன் உள்ளத்தை அவர் தெளிவுபடுத்தியிருப்பதையும் காணலாம்.

தந்தை பெரியாருக்கு 27.06.1970இல் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையில் மேனாள் மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுணசென் அவர்களால் வழங்கப்பட்ட யுனெஸ்கோ விருதில் குறிப்பிட்டுள்ள முதல் அடியே பெரியார் ஒரு புத்துலகச் சிற்பி என்பதாகும். அப்புத்துலகைச் சமைப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட கருவிகளில் ஒன்றே அறிவியல் சிந்தனை. பொதுவாக அது மனிதகுலத்திற்கும் சிறப்பாகத் தமிழர்களுக்கும் குறிவைத்து வழங்கப்பட்டதாகும்.

உயர் எண்ணங்கள் மலர்ந்த சோலை

தொடக்கப் பள்ளிக்கே தொடர்ந்து போகாத தந்தை பெரியார் உலக அறிவியல் உண்மைகளையெல்லாம் உணர்ந்து, ஒருங்கு திரட்டித் தன் மரணசாசனத்திலும் கூட வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தார் என அறிந்து வியப்பின் எல்லையிலே நிற்கிறோம்.

தந்தை பெரியாரின் சிந்தனைகள் எல்லாம் பிறவற்றிலிருந்து பிரதி எடுத்தவை அல்ல; சுயசிந்தனைகளேயாகும். ஆனால் அறிவியல் செய்திகளை மட்டும் உலக நாடுகளில் நேரில் கண்டும், உலக நூல்களிலிருந்து படித்தும், பத்திரிகைச் செய்திகளைப் படித்தும் தமிழக மக்களுக்கு அவ்வப்போது தாயினும் சாலப்பரிந்து புகட்டி வந்தார்.

தந்தை பெரியார் அறிவியல் சிந்தனைகளைச் சொன்ன காலத்தை இன்றைய நிலையோடு (2009) ஒப்பிட்டுப் பார்த்தால், பலவிதங்களிலே அறிவியலால் நீண்ட தூரம் வாழ்க்கைத் தரத்தில் பயணித்திருக்கிறோம் என்றாலும் நம்மிடையே அறிவியல் மனப்பான்மை (Scientific Temper) தீவிரமாக வளரவில்லை என்ற தோற்றம் மீதூர்ந்துள்ளதை உணரலாம். குறிப்பாக மாணவரிடத்தில், இளைஞரிடத்தில் பழம்பெருமை பேசித் திரிவோரிடத்தில் அறிவியல் மனப்பான்மை, காட்டுத் தீ போல் பரவினால் அதுவே இதன் வெற்றியாகக் கருத இடம் உண்டு.

வயதில் அறிவில் முதியோர் – நாட்டின்
வாய்மைப் போருக்கென்றும் இளையார்
உயர் எண்ணங்கள் மலரும் சோலை!
ஓங்கும் இராமசாமிப் பெரியார் வாழ்க! வாழ்க! வாழ்க!